
# கீதாசார்யன்




வைகுந்த விண்ணக [illegible]


வைகுந்த நாதன்

# கீதாசார்யன்-34

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்



தொகுதி 3 | துர்மதி ௵ | ஆடி மீ | ஜூலை 81 | பகுதி 10



ஆசிரியர்:
M. A. வேங்கடகிருஷ்ணன், M.A., M.Phil.

**இயக்குநர் குழு :**

**T. C. A. ராமாநுஜம்**
M.A. B.L., I.R.S. (தலைவர்)
**N. கணபதி**
விற்பனை இயக்குநர்
**R. ரவிச்சந்திரன்**
பொதுத்தொடர்பு இயக்குநர்
**P. T. ஸ்ரீனிவாசன்**
நிர்வாக இயக்குநர்

**ஆலோசகர் குழு :**


சாண்டில்யன் (தலைவர்)
K. R. ஸ்ரீநிவாஸாசாரியர்
Dr. V. V. ராமாநுஜம்
S. வேங்கடகிருஷ்ண பட்டாச்சாரியார்
K. E. B. ரங்கராஜன்

7, தெற்குமாட வீதி,
திருவல்லிக்கேணி
சென்னை—600 005.

★

தனி இதழ் விலை
ஒரு ரூபாய்
வருடச்சந்தா 12/-

# அரங்கநகர் வாழ!



வைணவ உலகுக்கே உயிர்நாடியாய்த் திகழும் ஸ்ரீரங்கம் கோயிலைப் பற்றி வெளிவரும் செய்திகள் கவலையை அளிக்கின்றன.

900 ஆண்டுகளுக்குமுன் ஸ்ரீராமானுஜர், கோயிலின் வைதிககார்யங்களை நிர்வகிப்பதற்கென்று ஏற்படுத்திய ஸ்ரீரங்க நாராயண ஜீயர் மடத்தைத் தற்போது அலங்கரிக்கும் ஜீயர் ஸ்வாமி அப்பொறுப்பிலிருந்து தாற்காலிக நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். இதை எதிர்த்து ஜீயர் ஸ்வாமி, உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்திருக்கிறார்.

ஒரு கோயிலின் வைதிகத் தலைவரான ஜீயர் ஸ்வாமி 'சஸ்பெண்டு' செய்யப் படுவது இதுவரை கேள்விப்படாத ஒன்று. இதுபோல் இனிமேலும் நடப்பது ஸம்ப்ரதாயத்துக்கு நல்லதல்ல. அப்படி நடவாமல் பார்த்துக் கொள்வது ஒவ்வொரு ஸ்ரீவைஷ்ணவனுடைய கடமையும் ஆகும்.

எது எப்படியிருந்தாலும் ஸ்ரீராமானுஜருடைய திவ்யாஜ்ஞைகளை நிறைவேற்றுவதற்கென்று அவராலேயே ஏற்படுத்தப்பட்ட மடத்தின் ஜீயர் ஸ்வாமிக்கு இந்நிலை ஏற்பட்டது மிக மிக வருந்தத்தக்கது.

“ராமானுஜார்ய திவ்யாஜ்ஞா வர்த்ததாம் அபிவர்த்ததாம்” என்று அநுதினமும் முழங்கும் ஸ்ரீவைஷ்ணவர்கள் அனைவரும் தமக்குள் வேற்றுமையின்றி ஒன்று சேர்ந்து நிலைமையைச் சீராக்க வேண்டும்; அதற்கு ஸ்ரீரங்கநாச்சியார் திருவடிகளிலும் ஸ்ரீரங்கநாதன் திருவடிகளிலும் இறைஞ்சுகிறோம்.

## அன்புள்ள வாசகரே!

உங்களுடைய ஆதரவாலும் ஆசியாலும் கீதாசார்யன் மூன்ருண்டு நிறைவை நெருங்கிக் கொண்டிருக்கிருன். அதை நாம் சிறந்த முறையில் கொண்டாட வேண்டாமா? எனவே மிகச் சிறந்த முறையில் ஆண்டுமலர் ஒன்றை உங்களுக்கு அளிக்கத் திட்டமிட்டிருக்கிரோம்.

**கீதாசார்யனுக்கு 36 மாதங்கள் நிறைவதை ஒட்டி 36 வண்ணப்படங்கள் கொண்ட ஒரு மலரை உங்களுக்கு அளிக்கப் போகிரோம்.** இது பற்றிய விவரங்களை அடுத்த இதழில் அறிவிக்கிரோம்.

நாளுக்குநாள் விலைவாசி விஷம்போல் ஏறிவருவதால் 36 வண்ணப் படங்கள் கொண்ட ஒருமலரை அச்சிடுவது சாதாரண காரியமல்ல. தோராயமாகக் கணக்கிட்டதில் ஒரு புத்தகத்தின் அடக்கவிலை சுமார் 25 ரூபாய் ஆகிறது. **ஆனல் அதை உங்களுக்கு 10 ரூபாய் விலையில் அளிக்க நாங்கள் தீர்மானித்திருக்கிரோம்.** இதனல் ஏற்படும் நஷ்டத்தை நன்கொடைகள் மூலமும் விளம்பரங்கள் மூலமும் ஈடுகட்டப் பெரும் முயற்சி எடுத்து வருகிரோம். **கீதாசார்யன் சந்தாதார்களுக்கு மட்டுமே இந்த சலுகை.**

எனவே உங்கள் பிரதிகளுக்கு இப்போதே பதிவு செய்து கொள்ளுங்கள். மலருக்காகப் பணம் செலுத்தும் போது தவருமல் உங்கள் சந்தா எண்ணைக்குறிப்பிடுங்கள்.

விலைவாசியைக் கருத்தில் கொண்டு, மிகக் குறைந்த பிரதிகளே அச்சிடப்படும். எனவே முதலில் பதிவு செய்து கொள்ளாதவர்களுக்கு மலர் கிடைப்பது அரிது.

—ஆசிரியர்

---

(குறிப்பு: இம்மலருக்காக நன்கொடைகள் விளம்பரங்கள் பெற்றுத்தர முன் வருபவர்களை வரவேற்கிரோம். விருப்பமுள்ளவர்கள் கடிதம் மூலம் தொடர்பு கொள்ளலாம்.)

# ஸ்ரீரங்கம் விவகாரம் என்ன?

ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தின் ஆணிவேர் ஸ்ரீரங்கமாகும். ஆழ்வார்கள் பதின்மராலும் பாடப்பெற்று, ஆசார்யர்கள் அனைவரும் ஈடுபட்டு மண்டிக்கிடந்த இடமும் அதுவே. வேர் தழைத்தால்தான் மரம் படர்ந்து வளரும். அதனால்தான் வைணவ உலகம் முழுவதும், அனுதினமும் "ஸ்ரீமந் ஸ்ரீரங்கச் ச்ரியமநுபத்ரவாம் அநுதினம் ஸம்வர்த்தய'' (ஸ்ரீரங்கச் செல்வமானது ஒவ்வொரு நாளும் எந்தவித இடையூறுமில்லாமல் தழைத்தோங்கட்டும்) என்று கோஷிக்கின்றது. ஆனால் அந்த மங்களாசாஸனத்திற்கு ஒரு குறை ஏற்பட்டுள்ளதை சமீபகாலமாக வெளிவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சென்ற பங்குனி மாதம் ஸ்ரீரங்கத்தில் நடைபெற்ற விமான ஸம்ப்ரோக்ஷணமே இந்த சர்ச்சைக்குக் காரணம் என்று அறிகிறோம். விமான ஸம்ப்ரோக்ஷணத்தையொட்டி நம்பெருமாள் புறப்பாடு கண்டருளி, யாகசாலைக்கு எழுந்தருளச் செய்வதற்கு அதிகாரிகள் விரும்பியதாகவும் அது கோயிலின் வழக்க முறைகளுக்கு முரணானது என்று அக்கோயிலின் வைதிகத் தலைவர் என்ற முறையில் ஸ்ரீரங்க நாராயண ஜீயர் ஸ்வாமி ஆட்சேபித்ததாகவும் கூறப்படுகிறது. இதுபற்றி ஸ்ரீ ஜீயர்ஸ்வாமி தரப்பில் கூறப்படுவதாவது: "கோயிலின் நித்தியப்படி பூஜைகளும் விசேஷ பூஜைகளும் ஸ்ரீராமானுஜர் ஏற்படுத்தியபடியே நடைபெற்று வருகின்றன. அவர் காலத்தில் அவர் ஏற்படுத்தாத புறப்பாடுகள் ஒன்று கூட இதுவரை நடந்தது கிடையாது. இதற்கு ஒரு எடுத்துக்காட்டு: கைசிகத் வாதசியன்று நடைபெறும் கற்பூரப் படியேற்றம் மிகவும் விசேஷம். அதை ஸேவிக்க விரும்பி ஸ்ரீரங்கம் வந்தான் விஜய நகர அரசன். அவன் சற்றே தாமதித்து வந்ததால் அப்புறப்பாடு முடிந்து விட்டது. ஆனால் மன்னனாயிற்றே என்று

அவனுக்காக மீண்டும் புறப்பாடு நடத்த முடியுமா? எக் காரணத்தைக் கொண்டும் ஸ்ரீராமானுஜருடைய கட்டளைகள் மீறப்படக் கூடாது என்று அடுத்த வருடம் வரை தங்கி யிருந்து அவ்வுத்ஸவத்தை ஸேவித்து விட்டுச் சென்றனர். (இன்னும் படியேற்ற மண்டபத்தெதிரில் அவ்வரச குடும்பத் தினர் சிலைகளைக் காணலாம்.) இப்படி அரசர்களுக்காகக் கூட வழக்கங்கள் மீறப்படுவதில்லை.

"மேலும் இதற்கு முன் பலமுறை ஸம்ப்ரோக்ஷணங்கள் நடை பெற்றிருக்கின்றன. இந்நூற்ருண்டின் ஆரம்பத்தில் பரமபாகவதோத்தமரான மதுரகவிதாஸர் என்பவர் பக்தர் களிடம் நன்கொடைகள் வசூலித்து ரங்க விமானத்தில் சில பகுதிகளைப் பொன்ஞல் வேய்ந்தார். அப்போது நடைபெற்ற ஸம்ப்ரோக்ஷணத்திலும் புறப்பாடு நடைபெறவில்லை, பெரு மாளும் யாகசாலைக்கு எழுந்தருளவில்லை. பின்னர் 1942ல் ஸ்ரீரங்கநாராயண ஜீயர் மடத்தை அலங்கரித்தருளா நின்ற (காரப்பங்காடு தேசிக வரதாசாரியர் ஸ்வாமி என்று பூர்வா ச்ரமத்திருநாமம் பெற்ற)ஜீயர் ஸ்வாமி, விமானம் முழுவதையும் தங்கத்தால் வேய்ந்து ஸம்ப்ரோக்ஷணம் செய்தபோதும் அப்படியே. அப்போதெல்லாம் யாகசாலையில் ஹோமாதிகள் நடைபெற சாத்துமறை மட்டும் மூலஸ்தானத்தில் நடை பெறும். இப்போது செய்தவை வழக்கத்திற்கு விரோத மானவை"—ஆக இவ்வளவும் ஜீயர் ஸ்வாமி தரப்பில் கூறப் படுபவை.

ஆனால் அதிகாரிகள் தரப்பில் ஸம்ப்ரோக்ஷண காலத்தில் புறப்பாடு நடந்ததற்கான ஒரு முன் உதாரணம் காட்டப் படுகிறது. அதாவது 1957ல் பெரிய பெருமாள் கர்ப்பக் ரஹம் தீப்பிடித்து எரிந்து பெரும் விபத்துக்குள்ளான போது. ஸன்னிதி செப்பனிடப்பட்டு நடந்த ஸம்ப்ரோக்ஷணத்தில் நம் பெருமாள் யாகசாலைக்கு எழுந்தருளினர்—என்பதே அது.

இதற்கு ஜீயர் ஸ்வாமி தரப்பில் வேறுவகையாகச் சொல்லப்படுகிறது. "தீ விபத்து ஏற்பட்டவுடனே வேறு ஒரு தாற்காலிக கர்பக்ருஹம் நிர்மாணிக்கப்பட்டு எல்லா மூர்த்திகளும் அதற்குள் எழுந்தருளினர். விமானமும் மூலவரும் கூட சித்திர ரூபமாய் எழுந்தருளியிருந்தனர். தீப்பிடித்தவன்று நடக்க வேண்டிய பங்குனி உத்தரத் திருநாள் உட்பட எல்லா வுத்ஸவங்களும் நடைபெற்றன. விமானம் செப்பனிடப் பட்டவுடன் ஸம்ப்ரோக்ஷண யாகசாலை ஏற்படுத்த வேண்டிய அதே சமயத்தில் தாற்காலிக கர்பக்ரஹம் அகற்றப்பட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதால் எல்லா மூர்த்திகளும் (சித்திர ரூபமாய் இருந்த விமானம், மூலவர் உள்பட) யாகசாலைக்கு எழுந்தருளி அதுவே கர்ப்பக்ரஹமாகக் கொள்ளப்பட்டது. இது விபத்தினால் ஏற்பட்ட நிர்ப்பந்தமேயொழிய வழக்கமல்ல. (Accidents can not be precedents). மேலும் தற்போது விமானம் பழுது பார்க்கப்பட்ட போது எல்லா பூஜைகளும் கர்ப்பக்ரஹத்திலேயே நடைபெற்றன. யாகசாலைக்கும் உத்ஸவர் மட்டுமே எழுந்தருளினர் மற்ற மூர்த்திகள் எழுந்தருளவில்லை ஆக யாகசாலையை கர்ப்பக்ரஹமாக வைத்துக் கொள்வதற்கும் ப்ரஸக்தி இல்லை. இக்காரணங்களினால்தான் பெருமாள் யாகசாலைக்கு எழுந்தருள்வது (ஸம்ப்ரோக்ஷணத்திற்கு முன்பே) ஆட்சேபிக்கப்பட்டது."

ஆனால் அதிகாரிகளோ, ஆகம பண்டிதர்களைக் கலந்தாலோசித்து இதில் ஆகம விருத்தம் எதுவும் இல்லை என்று அறிந்த பிறகே புறப்பாடு செய்ததாகக் கூறுகிறார்கள். ஜீயர் ஸ்வாமியின் கருத்தை ஊரார்கள் மனதளவில் ஏற்றுக் கொண்டாலும் நிர்வாகத்தினரை எதிர்க்க மனமின்றி இருந்துவிட்டனர் என்றும் கூறப்படுகிறது. முடிவில் ஜீயர் ஸ்வாமியே இவ் விஷயத்தை நீதிமன்றத்திற்கு எடுத்துச் சென்றார்.

தவிரவும், கோயிலின் கர்ப்பக்ரஹத்தினுள் இருந்த கருங் கற்களையும், படிகளிலும் கம்பங்களிலும் வேய்ந்திருந்த தகடு

களையும் நீக்கிவிட்டு சலவைக்கற்கள் பதிப்பதாகவும் நிர்வாகத்தினர் தீர்மானித் திருந்தனர் என்றும் இவ்விரண்டையுமே எதிர்த்து ஜீயர் ஸ்வாமி கோயிலின் வைதிகத் தலைவர் என்ற முறையில் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார் என்றும் தெரிகிறது. அவ்வழக்கும் இன்னும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

தாம் எதிர்ப்புத் தெரிவித்திருந்தபடியால், ஸம்ப்ரோக்ஷணம் நடைபெற்ற போது அதில் கலந்து கொள்ள மனம் இடம் தராமல் மனவருத்தத்துடன் மடத்திலேயே இருந்து விட்டாராம் ஜீயர் ஸ்வாமி. இதனால் மனக்கசப்புற்ற நிர்வாகத்தினர் ஸ்ரீஜீயர் ஸ்வாமி ஸம்ப்ரோக்ஷணத்தில் கலந்து கொள்ளாததனால், தம் கடமையிலிருந்து தவறிவிட்டார் என்று காரணம் காட்டியும், மேலும் பல தனிப்பட்ட குற்றச் சாட்டுக்களைக் காட்டியும் அவரை (ஸ்ரீரங்க நாராயண ஜீயர் ஸ்வாமி பதவியிலிருந்து) தற்காலிகமாக நீக்கம் செய்ததோடு மடத்தையும் காலி செய்யும்படி உத்தரவிட்டனர். தம்மைப்பதவி நீக்கம் செய்யும் அதிகாரம் நிர்வாகத்தினருக்குக் கிடையாது என்று நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார் ஜீயர் ஸ்வாமி. இவ்வழக்கு முடியும்வரை அவரை மடத்திலிருந்து காலி செய்யும்படி சொல்லக் கூடாது என்று தடைவிதித்திருக்கிறது நீதிமன்றம்.

தற்போது நிலைமை இதுதான். இரு வழக்குகளும் நீதிமன்றத்திலிருப்பதால் இதற்கு மேல் ஒன்றும் எழுதுவதற்கில்லை. நீதிமன்றத்தின் மூலம் அழகிய மணவாளன் நிச்சயம் நியாயத்தை நிலைநாட்டியே தீருவான்.

அடியார்கள் வாழ! அரங்கநகர் வாழ!

# சங்ககாலத் தமிழர் சமயம்

## (10) மறைகளில் முழுமுதல்வனாக முழங்கப் படுபவன் யார்?

பரம்பொருளுக்கே உரிய முற்கூறிய ஒன்பது தன்மைகளையும் கொண்டு வேதங்கள் எவனைப் பரம்பொருளாக அறுதியிடுகின்றனவோ அவனே மெய்யான பரம்பொருளாயிருக்கமுடியும். அந்த வேதங்கள் எவராலும் படைக்கப் படாதவை; அதனால் 'முதுமொழி', 'தொல்லியல்' எனப் படுபவை. அநாதிகாலமாக எழுதாக்கிளவியாய், ஆசாரியன் சொல்ல, சிஷ்யன் கேட்டே பரவிவருபவை; அதனால் 'வாய்மொழி' என்றும், 'கேள்வி' என்றும் வழங்கப்படுபவை. என்றும் அழியாதவை; அதனால் 'கெடு

ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார். M. A. B. L.
''ஸ்ரீ வைஷ்ணவ ஸுதர்சனம்'' ஆசிரியர்.

இல் கேள்வி' என்றும், 'மாய வாய்மொழி' என்றும் குறிக்கப்படுபவை. அனைத்துயிர்களுக்கும் நன்மையை உபதேசிப்பவையாகையாலே ''நலம் புரீ இ அம்சீர் நாம வாய்மொழி'' என்று சங்கப்பாடல்களில் சொல்லப்படுகின்றவை. ஒரு புருஷனால் உண்டாக்கப்பட்டாதவை யாகையாலே ''ஏவல் இல் முதுமொழி'' என்று கூறப்படுபவை. அறிவாளிகளுக்குப் பொருள்களைப் புலப்படுத்தும் (அறிவிக்கும்) வேதங்களாகையாலே 'புலம்' என்றும், அறிவிலோர்க்குப் பொருள்களை மறைத்துச் சொல்லுபவையாகையாலே 'மறை' என்றும் வழங்கப்படுபவை. இத்தகைய இந்த வேதங்களில் சொல்லப்பட்ட அர்த்தங்களே உண்மை என்பது வைதிகர்களின் கொள்கையாகும். வேதங்களோடு முரண்படுமாயின், ஆகமங்கள் புராணங்கள் முதலானவற்றில் சொல்லியிருப்பவை ஏற்கத்தகாதவை என்றும்

பலவிடங்களில் குறிக்கின்றார்கள். அவ்விடங்களைத் தொகுத்துரைப்போம் இனி.

முதற்பரிபாடலில் திருமாலை விரிவாக வர்ணித்து **"நின் வல வயின் நிறுத்தும் ஏவல் உழந்தமை கூறும் நா வல் அந்தணர் அரு மறைப் பொருளே"** என்று 'இப்பெருமைகளை எல்லாம் கூறி, எல்லா உலகும் உன்னுடைய ஏவலுக்குப் பணிந்து நிற்கின்றமையை நாவன்மையுடைய அந்தணர் ஓதும் அரிய மறையாகிற பொருள் கூறும்; என்று சொல்லப் பட்டது. எல்லாம் திருமாலுக்கு அதீனமே என்பதைத் திருமாலையும் மற்ற பொருள்களையும் ஒரே வேற்றுமையில் படிப்பதன் மூலம் காட்டிவரும்போது **"நலம் முழுது அளை இய புகர் அறு காட்சிப் புலமும் பூவனும் நாற்றமும நீ"** [(உயிர்கள் அனைவர்க்கும்) நன்மைகளை ஒன்றுவிடாமல் காட்டுவதும், எந்தக் குற்றமும் அற்றதும், அனைத்தையும் அறிவிப்பதும், பொருள்களைப் புலப்படுத்துவதுமான வேதமும் (அதை உன்னிடமிருந்து ஓதிய) உன் உந்தித் தாமரையில் பிறந்த பிரமனும், அவனுடைய படைப்புத் தொழிலும் உன் அதீனமே] என்று வேதமும் திருமாலுக்கு வசப்பட்டது என்றும், திருமாலைப் பரம்பொருளாக அறிவிப்பது என்றும் காட்டப்பட்டது. **"வாய்மொழிப் புலவ!"** [வாய்மொழியாகிற வேதத்திலே புலப்படுகிறவனே!] என்று பாடுவதன்மூலம் இது மேலும் வலியுறுத்தப் பட்டது.

இரண்டாம் பரிபாடலிலும் **"வடு இல் கொள்கையின் உயர்ந்தே ஆய்ந்த கெடு இல் கேள்வியுள் நடுஆகுதலும்"** [குற்ற மற்ற கொள்கைகளையுடைய குணம் மிக்கவர்களால் ஆராயப்படுவதும், அழிவில்லாததும், காதால் கேள்விப் பட்டே பரவுதலால் 'கேள்வி' எனப்படுவதுமான வேதத்தினுள் அனைத்துக்கும் அந்தர்யாமியாகச் சொல்லப் படுகிறவனும் நீயே] என்று வேதம் திருமாலையே அனைத்

துக்கும் அந்தர்யாமியாக ஓதிற்று என முழங்கப்பட்டது' வராஹாவதாரத்தின் சிறப்பைக் கூறி "**உள்ளுநர் உரைப் போர் உரையொடு சிறந்தன்று**" [கற்றுணர்ந்து ஓதுமவர் களுடைய வேதவாக்கியங்கள் இதைக் கூறுகின்றன. அவ்வுரையும் உனது இவ்வருஞ்செயலைப் பேசத்தக்க சிறப்பை உடையதன்று] என்று 'வேதம் வராஹப்பெருமான் பூமியைத் தூக்கின அருஞ்செயலை ஓதுகிறது' என்று கூறப்பட்டது. திருமாலுடைய திருமேனியையும் திருக்கண்களையும், உண்மையுரையையும், பொறுமைக் குணத்தையும், திருநிறத்தையும் உவமைகளைக் காட்டி வர்ணித்து "**என்னும் நாவல் அந்தணர் அருமறைப் பொருளே; அவ்வும் பிறவும் ஒத்தனை; உவ்வும் எவ்வனும் நீயே**" [இவ்விஷயத்தையெல்லாம் சொல்லுவது நாவன்மையுடைய அந்தணர் ஓதும் அரிய மறையாகிற பிரமாணம். 'முற்கூறிய உவமைகளையும், மற்றும் பலபொருள்களையும் ஒத்திருப்பதையும் நீ' என்றும், 'எத்தனை உபமானங்களைச் சொன்னாலும் சொற்களுக்குள் அடங்காதவனாய், குறிப்பால் உணரத்தக்கவனாகவே இருப்பவன் நீ' என்றும், 'எல்லாப் பொருள்களுக்கும் அந்தர்யாமியாய் இருப்பவன் நீயே' என்றும் அருமறைகள் ஓதுகின்றன] என்று பரம்பொருளுக்கே உரிய பல பெருமைகளைத் திருமாலுக்கு அருமறைகளே ஓதுகின்றது என முழங்கப்பட்டது. "**கேள்வியுள் கிளந்த ஆசான் உரையும் நின் உருபு**" [வேதத்தில் யஜமானனாகச் சொல்லப்படும் ஆசாரியன் உச்சரிக்கும் வேதமந்திரங்கள் உன் உருவமாகும்] என்று வேதமந்திரங்கள் திருமாலின் உருவமே என்று உணர்த்தப்பட்டது. மூன்றும் பரிபாடலிலும், உலகிலுள்ள பொருள்களனைத்தையும் எடுத்து, '**மாயோய்! நின்வயின் பரந்தவை உரைத்தேம் மாயா வாய்மொழி உரைதர வலந்து: வாய்மொழி ஓடை மலர்ந்த தாமரைப் பூவினுள் பிறந்தோனும், தாதையும் நீ என மொழியுமால் அந்தணர் அருமறை**' மாயோனே! அழிவில்லாத வேதம் சொல்லுகிறபடி [உன்னிடமிருந்து

உண்டாகும் பொருள்களை] முறைதப்பிக் கூறினோம் நாங்கள். வேதமாகிற ஓடையிலே மலர்ந்த (ஓதப்படுகிற) தாமரைப் பூவில் பிறந்தவனாகிற பிரமனும் (அவனுக்கு அந்தர்யாமி யும்), அவனுக்குத் தந்தையும் நீயே என்று அந்தணர்களு டைய அருமறை முழங்குகின்றது] என்று "'பிரமன் முதலான அனைவரையும் படைத்து, பிரமனுக்கு அந்தர் யாமியாயிருப்பவனும் திருமாலே' என்று வேதம் ஓதுகிறது" என்று பறைசாற்றப்பட்டது. **"பதினாயிரம் கை முதுமொழி முதல்வ!"** என்று எண்ணிறந்த கைகளையுடைய முதல் வனாகப் புருஷஸூக்தம் முதலான வேதப்பகுதிகள் ஓது கின்றன என்று காட்டப்பட்டது. **"முன்னை மரபின் முது மொழி முதல்வ!"** என்று அநாதி சிஷ்யாசார்ய பரம்பரை யின் மூலம் பரவிவரும் வேதத்தில் முதல்வனாக ஓதப்படு பவன் திருமாலே என்று முழங்கப்பட்டது. **"கால முதல் வனை; ஏஎஇன கிளத்தலின் இனைமை நற்கு அறிந்தனம்"** என்று சாம வேதம் திருமாலைக் காலமுதல்வனாகக் காட்டு வதாக உணர்த்தப்பட்டது. **"வேத்து மறை நீ"** என்று வேதத்தில் மறைந்து நிற்கும் பொருள் திருமாலே என்று பாடப்பட்டது. **"தொல்லியல் புலவ!"** என்று அனாதி வேதத்தில் புலப்படுபவன் திருமாலே என்று அறுதியிடப் பட்டது. நாலாம் பரிபாடலிலும் திருமாலின் திருமேனிச் சிறப்பையும் பெருமையையும் பேசி **"அவை நின் ஓர் அன் ஓர் அந்தணர் அருமறை"** என்று அவை திருமாலைப் போலே தலைசிறந்த வேதங்களிலே ஓதப்படுகின்றன என்று முழங்கப் பட்டது. பதின்மூன்றும் பரிபாடலும் **"பாப்புப் பகையைக் கொடியெனக் கொண்ட கோடாச் செல்வனை' ஏவல் இன் முதுமொழி கூறும் சேவல் ஓங்கு உயர்கொடிச் செல்வ! நல் புகழவை"** [பாம்புக்குப் பகையான கருடனைக் கொடியாகக் கொண்ட அழியாத செல்வத்தையுடையையான திருமாலே! கருடனாகிற மிக உயர்ந்த கொடியையுடைய செல்வனே! உனது பெருமைகளை எவராலும் இயற்றப்படாத முது மொழியாகிற வேதம் கூறும்] என்று வேதமே திருமாலைத்

நல்லவனாக ஓதிற்று என உணர்த்தப்பட்டது. பதினைந்தாம் பரிபாடலிலும் திருமாலின் பெருமைகளைக் கூறி **"நலம் பரீஇ அம்சீர் நாம வாய்மொழி இது என உரைத்தலின்"** [அனைவர்க்கும் நலத்தை விரும்பி, அழகிய சிறப்பையும் புகழையும் உடைய வேதமானது இப்பெருமைகளை ஸங்கர்ஷண வாஸு தேவர்களுக்குச் சொல்லுகையால்] என்று திருமாலைப் பரம் பொருளாகக் கூறுகின்றவை வேதங்களே என்று முழங்கப் பட்டது. இவற்றிலிருந்து பரம்பொருளுக்கேயுரிய தனித் தன்மைகளையுடையவனாகத் திருமாலையே வேதங்கள் முழங்கின என்பதே சங்ககாலத் தமிழர் கொள்கை என விளங்குகிறது. வேறு எந்த தெய்வத்தையும் பரம்பொருளுக்குரிய தன்மைகளை உடையதாக வேதங்கள் காட்டுகின்றன— என்று இவர்கள் எங்கும் தெரிவிக்கவில்லை என்பதும் குறிக்கொள்ளத்தக்கது.

(அடுத்த இதழில் முடியும்)

Anything & Everything in
Real Estates
( Buying & Selling Properties )
Civil Constructions
Please Contact

MINERVA ENTERPRISES

2, Narayanan Street.
Mahalingapuram,
Nungambakkam MADRS-600 034.

# இராமாயணச் சுவையமுதம்

[''ஸ சாஸ்ய கதயாமாஸ சபரீம் தர்மசாரிணீம், ச்ரமணீம் தர்மநிபுணமபிகச்சேதி ராகவம்'']. தநுகபந்தனுடைய வார்த்தையான விதில் சபரியை தர்மசாரிணியென்றும் தர்மநிபுணு என்றும் விசேஷித்திருக்கிறது. இங்கு விவக்ஷிதமான தர்மம் எதுவென்று பார்க்குமளவில் ஆசார்ய சுச்ரூஷை, ஆசார்யாபிமானம் எனப்படும் உத்தமோத்தம தருமமே யென்று தெரியவருகிறது. மேலே ஆரண்யகாண்ட முடிவில் பெருமாள் சபரியின் ஆச்ரமத்தில் புகுந்து வினவுகையில் ''கச்சித் தே குருசுச்ரூஷா ஸபலா சாருபாஷிணி!'' என்கிறுர். இங்கு சாருபாஷிணி என்கிற ஸம்போதனம் அவளுடைய பேச்சினிமையில் பெருமாள் மிகமிக ஈடுபட்டதைக் காட்டும். அந்த பேச்சினிமையைக் கொண்டே அவள் ஆசார்ய சுச்ரூஷையில் பழுத்தவள் என்பதையும் பெருமாள் தெரிந்துகொண்டார்.

## ஸ்ரீ.உ.வே. மஹாவித்வான் பிரதிவாதி பயங்கரம்
## அண்ணங்கராசாரியர்ஸ்வாமி

அவள் விடை கூறுமிடத்தும் *சக்ஷுஷா தவ ஸௌம்யேந பூதாஸ்மி ரகுநந்தந, பாதமூலம் கமிஷ்யாமி யாநஹம் பர்யசாரிஷம்'' என்று, தான் ஆசார்யபாத ஸேவை பண்ணியிருந்ததைச் சொல்லியிருக்கையாலும் சபரீ ஆசரித்த தருமம் இதுவே யென்னத்தட்டில்லே.

(ப்ராஸங்கிகமான ஒரு ஸந்தோஷ ஸூசனம் கேண்மின். மேலெடுத்துக் காட்டிய *சக்ஷுஷா தவ ஸௌம்யேநேத்யாதி ச்லோகத்தின் உத்தரார்த்தம் ''கமிஷ்யாமி யக்ஷயாந் லோகாந் த்வத்ப்ரஸாதாத் அரிந்தம!'' என்று மாறியிருக்கிறது. பலபதிப்புகளிலும் இதுவே பாடமாகக் காண்

கிறது. கோவிந்தராஜரும் மாறின பாடத்தையே வியாக்கியானித்திருக்கிருர் என்பதுகண்டு வருந்தியிருந்தோம். அந்த கோவிந்தராஜரும் ''தர்மசாரிணீம்'' என்கிற ப்ரக்ருத ஸ்தலத்தில் ''பாதமூலம் கமிஷ்யாமி யாநஹம் பர்யசாரிஷம் இதி வக்ஷ்யமாணத்வாத்'' என்றெழுதியிருப்பதால் இப்பாடம் அவர்க்கும் கிடைத்ததுதானென்று பரமஸந்தோஷமடைந்தோம்.

[ஸோப்யகச்சந் மஹாதேஜாச் சபரீம் சத்ருஸூதந: சபர்யா பூஜிதஸ் ஸம்யக் ராமோ தசரதாத்மஜ;] [ஸ: சபரீம் அப்யகச்சத்] சபரியைப்பற்றி முன்னம் தெரிவித்த தநுகபந்தனுடைய வாக்கில் 'அபிகச்ச' என்று வந்திருப்பதும், இங்கு 'அப்யகச்சத்' என்று ருஷிவாக்கில் வந்திருப்பதும் உற்று நோக்கத்தக்கவை. ''ச்ரமணீம் தர்மநிபுணாம் அவேக்ஷஸ்வ'' என்ருே 'கடாக்ஷய' என்ருே கபந்தன் சொல்லியிருக்கலாம். இங்கும் 'ஸ ப்ராப சபரீம் ராம:' என்ருே 'ஸ சபர்யாச்ரமம் ப்ராப' என்ருே சொல்லியிருக்கலாம்; இங்ஙனன்றிக்கே 'அபிகச்ச' என்று அவன் சொன்னதும், 'அப்யகச்சத்' என்று ருஷி சொல்லுவதும் ஸாமான்யமானதன்று. ஒரு தேவதாவிசேஷத்தில் செய்யும் வழிபாடு தன்னையே அபிகமனம் என்று சொல்லுவது முறை. அந்தரங்க ப்ரதிபத்தியோடு செய்யும் அணுகுதல் அபிகமனமெனப்படும். அத்தகையதான வழிபாட்டுக்குரிய விலக்ஷண வ்யக்திவிசேஷம் சபரியென்பவள் என்று விளங்குகிறது.

இங்கு (மஹாதேஜா:) என்றும் (சத்ருஸூதந:) என்றும் பெருமாளுக்கு இரண்டு விசேஷணங்களிட்டது பாதபூரணார்த்தமன்று. ஸாபிப்ராயம். சபரியின் ஆச்ரமத்தருகு எழுந்தருளும்போதே பெருமாளுடைய திருமுக மண்டலம் மிகவும் தேஜஸ்வியாயிற்றென்கிறது மஹாதேஜா: என்பதனுல். சரமபர்வ நிஷ்டையைக் காணப்பெறுகிருே

மென்கிற மகிழ்ச்சி முகத்திலே தெரியலாயிருந்தது. ப்ரதம பர்வநிஷ்டர்களான பகவத்பக்தர்களைக் காண்பது அரி தன்று; சரமபர்வநிஷ்டர்களெனப்படுகிற ஆசார்ய சுச்ருஷா நிரதர்களையும் ஆசார்யாபிமானபாத்ர பூதர்களையும் காண் பது பெருந்தவப் பயனென்பர். இதற்கு மேல் (சத்ரு ஸூதந:) என்றது, அந்த சபரிக்கு ப்ராப்திப்ரதிபந்தகங் களாய்ச் சில விரோதிகளிருந்தனவாக அவளுடைய வாக்கில் நின்றுமே தெரியவருவதனுல், அந்த விரோதி நிரஸநத்தைத் தம்முடைய கடாக்ஷவீக்ஷணத்திஞல் செய்தருள்வதாக ஸங் கல்பித்தார் பெருமாள் என்று தெரிவிக்கின்றது.

இதற்குமேல் 'சபர்யா பூஜிதஸ் ஸம்யக் ராம:' என்ற தைப் பற்றிச் சில ஆராய்ச்சிகள் செய்யப்ராப்தமாகிறது. ஸ்ரீ ராமாயணத்திலும் கம்பராமாயணத்திலும் பெருமாள் சபரியிடம் கலந்துபரிமாறினவரலாறு விசேஷித்து ஸ்பஷ்ட மாகக் கூறப்படவில்லையாயினும், இதரராமாயணங்களிலுள் ளதைக் கொண்டோ, இவ்விடத்தில் ''சபர்யா ஸம்யக் பூஜித:'' என்றிருப்பதை ஆழ்ந்து நோக்கியோ நம் ஆசார் யர்கள் அருளிச்செய்த விசேஷம் யாதெனில்; ஸ்ரீவசன பூஷணத்தில் (233) ''பெருமாள் ஸ்ரீசபரி கையாலே அமுது செய்தருளினர்'' என்றவிடத்து வியாக்கியானத்தில் மண வாள மாமுனிகள் ''ரகு குல திலகராய் ஆசாரப்ரதானரான பெருமாள் 'சபர்யா பூஜிதஸ் ஸம்யக் ராமோ தசரதாத் மஜ:' என்னும்படி வேடுவிச்சியாய்வைத்தே குருசுச்ரூ ஷையிலே பழுத்து ஜ்ஞாநாதிகையாய்த் **தன் நாவுக்கு இனிதாயிருந்த** பலமூலாதிகளெல்லாம் இங்குத்தைக்கென்று ஸஞ்சயித்துக் கொண்டு வரவு பார்த்திருந்த ஸ்ரீசபரி, தன் ஆதராநுகுணமாகத் தன் கையாலே அமுது செய்யப்பண்ண அதிஸந்துஷ்டராய் அமுது செய்தார்'' என்றருளிச் செய் துள்ள ஸ்ரீ ஸூக்திகள் விசேஷித்து அனுஸந்திக்கத்தக்கவை.

இதில் ''தன் நாவுக்கு இனிதாயிருந்த'' என்கிற வார்த் தையை மாமுனிகள் மூலப்ரமாணமொன்றின்றி யருளிச்

செய்யார். ''பூர்வே பூர்வேப்யோ வச ஏததூரசு:'' என்று வேதமோதின ப்ரபலப்ரமாணம் இருந்தே தீரும். இதை யனுசரித்தே கோவிந்த ராஜார்யரும் ''ராமஸ் ஸமாகமிஷ்யதீதி ஸ்வாதூநி பலமூலாநி ஆஸ்வாத்யாஸ்வாத்ய பரீக்ஷ்ய நிக்ஷிப்தவதீ இதி ப்ரஸித்தி:'' என்றெழுதி வைத்துள்ளார். இப்பொருளெல்லாம் (ஸம்யக்) என்பதில் அடங்கியே யுள்ளது. கீழே சரபங்க முனிவர் அகஸ்த்ய முனிவர் முதலானோர் செய்தது ஸாமாந்ய பூஜை; இதுவே பெருமாள் திருவுள்ளத்தால் ஸம்யக் பூஜை என்னலாம்படியுள்ளது.

(தொடரும்)

## மதிப்புரை

ஸ்ரீ வைஷ்ணவம்—மாத இதழ்; ஜூன் 1981; வெளியிடுவோர்— ஸ்ரீ கோயில் கந்தாடை அண்ணன் ஸ்வாமி சிஷ்ய சபா (Regd) 29, ஹனுமந்தராயன் கோயில் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5. ஆசிரியர் ஸ்ரீ K. S. நரசிம்மன்; பக்கம் 26 (டிம்மி) விலை ரூ 1-25.

கந்தாடையண்ணன் ஸ்வாமி திருமாளிகை சிஷ்யர்களுக்கென ப்ரதானமாக திருமாளிகை சிஷ்ய சபையினரால் வெளியிடப்படும் இம்மாத இதழில் திருமாளிகையின் வர்த்தமான ஆசார்ய ஸ்வாமி, மற்றும் வித்வான்கள் ஸ்ரீரங்கம் R. நரசிம்மாசாரியர் ஸ்வாமி, T. S. ராஜகோபாலய்யங்கார் ஸ்வாமி போன்ற உலகறிந்த எழுத்தாளர்களும், மற்றும் புனைப்பெயரில் எழுதும் எழுத்தாளர்களும் கட்டுரைகள் உதவியுள்ளார்கள். ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்திற்குட்பட்ட பலதரப்பட்ட (diversified) விஷயங்களைப் பற்றிய கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. ஸ்ரீ வைஷ்ணவர்கள், குறிப்பாக அண்ணன் திருமாளிகை திருவடி ஸம்பந்திகள் அவச்யம் வாசித்துப் பயன்பெற வேண்டிய பத்திரிகை. செய்தித்தாள் காகிதத்தில் 26 பக்கம் உள்ள இதழுக்கு ரூ1-25 விலை சற்று அதிகமாகத் தோற்றினாலும் திருமாளிகை சபைப் பத்திரிகை என்ற நோக்கில் அவசியம் ஆதரிக்கத்தக்கதே. அச்சுப்பிழைகளைப் பூரணமாக விலக்குமாறு ஆசிரியரை வேண்டுகிறோம்.

V. V. R.




## 22. பணக்கஷ்டம்

மல்யுத்தத்தில் பலருடைய சதைகளைக் கிழித்திருக்கும் வில்லிதாஸனுக்கு அந்தணர்களுடைய வேஷ்டிகளைக் கிழிப்பது ஒரு பொருட்டாயில்லையென்றாலும், அவர்கள் வைஷ்ணவர்கள், மடத்தைச் சேர்ந்தவர்கள் என்ற நினைப்பால், மிகுந்த பக்தியுடனும், எச்சரிக்கையுடனும் ஒவ்வொரு வேஷ்டியிலும் ஒவ்வொரு சாணுக்கு மேல் போகாமல் தனது கையால் சாண் போட்டு அளவெடுத்துக் கிழித்தான். கிழித்த பின்பு அதே வேஷ்டிகளைத் திரும்பவும் பழையபடி தாழ்வாரக் கூரையில் உலர்த்தவும் செய்தான். அத்தனையையும் கிழித்த பின்பு கிழித்த பகுதிகளை எண்ணிப் பார்த்தான். மொத்தம் எட்டு துணிகளை கிழித்திருந்தது புரிந்ததால் பரவசத்துடன் கிழிக்கப் பட்ட பகுதிகளை மடித்துக் கண்களில் ஒற்றிக்கொண்டான். ''உடையவரின் கருணைதான் என்ன! எனக்கு அஷ்டாக்ஷத்தை எத்தனை விதங்களில் காட்டிக் கொடுக்கிறார்!'' என்று வியந்து கொண்டே மடத்துக்குள் சென்று உடையவரை தண்டனிட்டு தாளும் தடக்கையும் கூப்பி ''ஸ்வாமி! உத்தரவை நிறைவேற்றி விட்டேன்'' என்று கையிலிருந்த கிழிசல் துண்டுகளைக் காட்டினான்.

உடையவர் அவனை கேள்வி கேட்கும் பாவனையில் ஏறெடுத்து நோக்கினார். ''இவற்றை எங்காவது எறிந்துவிடு'' என்றார்.

சிறிது தயங்கினன் வில்லிதாஸன். "இவற்றை அடியேன் வைத்துக் கொள்ளலாமா?" என்று பயந்து வினவினன்.

"இவற்றில் என்ன விசேஷம்?" என்று உடையவர் கேட்டார்.

"பாகவதப் பிரசாதம். பாகவதர் உடுத்திக்களைந்த பீதக வாடைப் பகுதிகள். தவிர எட்டு துண்டுகள் இருக்கின்றன அஷ்டாக்ஷரத்தை நினைவூட்டுகின்றன" என்று வில்லிதாஸன் கண்களை நிலத்தில் தாழ்த்திக் கூறினன்.

உடையவர் கண்களில் அன்பு பொங்கெடுத்து ஓடியது. இதயத்தில் "இந்த பக்குவம் மடத்திலிருக்கும் அந்தணர்களுக்கு இல்லையே" என்ற ஏக்கம் ஏற்பட்டது. சரி உன் னிஷ்டப்படிசெய்" என்ருர்.

வில்லிதாஸன் அந்தத் துண்டுகளை உள்ளேயிருந்த தனது மடிசஞ்சியில் பத்திரப் படுத்தினன். பிறகு கூடத்தைத் துடைத்து சுத்தப் படுத்திக் கொண்டிருந்த பொன்னுச்சியுடன் சேர்ந்து உடையவர் காலட்சேபத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளைக் கவனிக்கலானன். ஏற்பாடுகள் முடிந்ததும் திருவாராதனத்துக்கு புஷ்பமெடுக்கப் புறப்பட்டான் அந்த சமயத்தில் உள்ளறையிலிருந்து வெளியே வந்த ஆண்டான் "வில்லிதாஸா; நீயும் பொன்னுச்சியுமாகக் காவேரிக்குப்போய் இந்தத் துணிகளை துவைத்துக்கொண்டு வாருங்கள்" என்று ஒரு மூட்டை துணிகளை அவனிடம் கொடுத்தார். மறுவார்த்தை பேசாமல் வில்லிதாஸன் அன்று இரண்டாம் முறையாகப் புறப்பட்டான் காவிரிக்கு. பொன்னுச்சியும் உடன் சென்ருள்.

அவர்கள் சென்ற ஒரு நாழிகைக்கெல்லாம் மடத்து வாசலில் பெரும் கூச்சல் கேட்டது. வாய்க்கு வாரத வார்த்தைகள் நாக்கில் நரம்பில்லாமல் வீசப்பட்டன. இந்தக்

கூச்சலுக்குக் காரணம் தெரிந்திருந்தாலும் தெரியாதது போல் உடையவர் ஆண்டானை அழைத்து "ஆண்டான் வெளியே யார் கூச்சல் போடுகிறார்கள் பார்த்து வா" என்று ஆக்ஞாபித்தார்.

"உண்மையில் இவர் எம்பெருமான்தான். பிள்ளையை கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டப்பார்க்கிறார்" என்று தன்னுள் சொல்லிக்கொண்ட ஆண்டான் மடத்து வாயிலுக்கு வந்து அங்கு கண்டபடி கூச்சலிட்டுக்கொண்டிருந்த அந்தணர்களை நோக்கி "ஏன் இந்தக் கூச்சல்?" என்று வினவினார்.

இதைக்கேட்டதும் அந்தணர் கூச்சல் அதிகப்பட்டது. "யாரோ ஒரு தூர்த்தன் வேஷ்டிகளைக் கிழித்துவிட்டான்" என்றார் ஒருவர். மற்றவர்கள் வசைபாடலைத் தொடர்ந்தார்கள். "சரி உள்ளே வந்து உடையவரிடம் சொல்லுங்கள். மடத்து வாசலில் கூச்சல் வேண்டாம்" என்றார் ஆண்டான்.

கூடத்தில் உபன்யாசத்துக்குத் தயாராக உட்கார்ந்திருந்த உடையவரை தெண்டனிட்ட அந்தணர்கள் தங்கள் குறையைத் தெரிவித்தார்கள். உடையவர் அதை விசாரிப்பதாகக் கூறிவிட்டு உபன்யாசத்தை ஆரம்பித்தார். பிராம்மண கோஷ்டி நடுவே உட்கார்ந்தது. இரண்டு ஏகாங்கிகள் எம்பெருமானாருக்கு இருபுறத்திலும் நின்று திருவாலவட்ட கைங்கர்யம செய்தார்கள். வெளியிலிருந்து வந்த பாகவத கோஷ்டி கூடத்தை சுற்றிக் கொண்டது.

அன்று திருவாய்மொழி முதல் பத்தில் இரண்டாவது பகுதியை விளக்க முற்பட்ட எம்பெருமானார "வீடுமின் முற்றவும்" என்ற பாட்டை எடுத்துக்கொண்டு வியாக்கியானம் செய்தார். "வீடுமின்" என்று ஆழ்வார் பரித்யாகத்துக்கு பிரதான்யமளித்திருப்பதை எடுத்துக்காட்டினார். சகலத்

திலும் பாச பந்தங்களை அறுத்துக்கொள்ளவேண்டிய அவசியத்தை எடுத்துக் காட்டினார். 'பரித்யக்தா மயாலங்கா; த்யக்த்வா புத்ராம்ச தாராம்ச'' என்று விபீஷணுழ்வான் ''விடப்பட்டது என்னுல் இலங்கை. விடப்பட்டார்கள். புத்ரர்களும் பார்யையும்'' என்று 'விடப்பட்ட'தை முதலில் எடுத்துச் சொன்னதை விளக்கிய எம்பெருமானுர் ''சிறிய விஷயங்களிலாவது தியாக புத்தி வேண்டும். அப்பொழுது தான் எம்பெருமான் கடாட்சம் கிட்டும்'' என்று சாதித்தார்.

எம்பெருமானுடைய வாக்கு வன்மையும், கணீரென்ற கண்டசப்தமும் அப்படியே அங்கிருந்தவர்களை மெய்மறக்கச் செய்தது. உபன்யாசத்தின் சுவை தெய்வ சான்னிதயத்தை அங்கேயே சிருஷ்டித்தது. ''இச்சுவை தவிர யான் போய் இந்திரலோகமாளும் அச்சுவை பெறினும் வேண்டேன் என்ற தொண்டரடிப் பொடியாழ்வாரின் பாசுரம் இந்த சதஸ்ஸுக்கும் பொருந்தும்'' என்று ஆண்டான் நினைத்தார்.

சில நாட்கள் சென்றன. ஒரு நாளிரவு உடையவர் தமது சயன அறையில் சிந்தாகிராந்தராய் உட்கார்ந்திருந்தார். பக்கத்திலிருந்த பிராம்மண கைங்கர்யபரர்கள் ''ஸ்வாமி ஏதோ கிலேசத்திலிருப்பதுபோல் காண்கிறது'' என்றுர்கள்.

''ஆம்'' உடையவர் பதிலில் துன்பம் தெரிந்தது.

''எதற்கும் அடியோங்களிருக்கிருேமே. உத்தரவு எது வானுலும் நிறைவேற்றுகிருேம்'' என்றுர் ஒருவர்.

மடத்துச் செலவுக்கு அடியோடு பணமில்லை. பொக்கிஷம் காலியாகி விட்டது என்றுர் எம்பெருமானுர்.

''ஏதாவது பணம் திரட்டலாமா?'' என்று இன்னெருவர் கேட்டார்.

''எப்பொழுது திரட்டுவது? எங்கு திரட்டுவது?'' என்று கிலேசப்பட்ட எம்பெருமானுர் திடீரென ஆண்டானை நோக்கி

"ஆண்டான்! பொன்னுச்சி காலில் இருக்கிற இரண்டு சிலம்பு களைப் பார்த்திருக்கிறீரா?" என்று வினவினார்.

உடையவர் எண்ணம் போகும் திசையை உணர்ந்த ஆண்டான் "பார்த்திருக்கிறேன். ஒவ்வொரு சிலம்பும் லட்சம் பவுன் பெறும்" என்றார்.

"அந்த இரண்டையும் கொண்டுவந்து விட்டால்?" என்று கேட்டார் உடையவர்.

"அடுத்து சில ஆண்டுகளுக்கு மடத்துக்குப் பணக்கஷ்டம் கிடையாது" என்றார் ஆண்டான்

"அதை யாராவது கவர்ந்து வர முடியுமா?" என்று சர்வ சாதாரணமாகக் கேட்டார் உடையவர்.

"முடியாமலென்ன? ஆனால் அவள் புருஷன் மல்லன் இருக்கிறானே அவன் எங்களைப் பிண்டமாக அடித்துப்போடுவானே" என்றார் ஒரு கைங்கர்யபரர்.

"அவனைப் பற்றிக் கவலை வேண்டாம். இங்கேயே நிறுத்திக் கொள்கிறேன்" என்ற உடையவர் பக்கத்திலிருந்த இரு பாகவதர்களையும் நோக்கினார்.

"அப்படியானால் கவலையில்லை" என்றார் ஒருவர்.

"இதற்கு அமாவாசை ராத்திரி சௌகர்யமென்று நினைக்கிறேன்" என்றார் உடையவர்.

"அன்றே காரியத்தை முடிக்கிறோம்" என்று இருபாகவத சிரோமணிகளும் கூறினார்கள்.

உடையவர் முகத்தில் சாந்தி நிலவியது. "ததாஸ்து" என்று அனுக்கிரகம் செய்தார்.

மெள்ள மெள்ள அமாவாசை இரவும் வந்தது.

(தொடரும்)

ஸ்ரீ

# ஸ்ரீவைஷ்ணவம்

Dr.V.V. ராமாநுஜம்

மோக்ஷத்தில் இச்சையுள்ள சேதனன் ஜகதேக காரணனான பரம புருஷனை உபாஸிக்க வேண்டும் என்று விதித்த வேதம், ஸ்ரீமந்நாராயணனே அக்காரணபுருஷன் என்றும் காட்டித்தந்தது. மிகவும் பெருப்பெருத்த புருஷார்த்தமான மோக்ஷத்தையே தரவல்ல அப்பரமன் ஐஹிகமான இதர புருஷார்த்தங்களை எளிதில் தரவல்லவன் என்பது சொல்லாமலே விளங்கும். எம்பெருமானின் பரத்துவத்தை நமது ஆழ்வார்களுள் தலைவரான நம்மாழ்வார் தமது திருவாய்மொழியில் முதல் பத்தில் (பத்து திருவாய்மொழிப் பதிகங்களாலானது ஒருபத்து) வேதாந்தவழியில் நாராயண பரத்வத்தை ஸ்தாபித்துள்ளதைக் கண்டோம். *அயர்வறும் அமரர்கள் அதிபதி (இமையோர் தலைவன் — தேவாதிராஜன்) ஆன அவன், உயர்வற உயர்நலமுடையவன் சுடர்மிகு சுருதியில் உளன்; உடன் மிசையுயிரெனக்கரந்தெங்கும் பரந்துளன்; வண்புகழ் நாரணன்; மலர்மகள் விரும்பும் நமரும் பெறலடிகள்; எளிவருமியல்வினன் (பேரருளாளன்) என்று எல்லாம் அவன் பெருமைகள் பேசப்பட்டன. மேலே இரண்டாம் பத்தில் காரணவஸ்துவான இப்புருஷனே மோக்ஷப்ரதன் (வீடு என்னும் பரமபதம் தர வல்லவன்) என்பதை வேதோபப்ரும்ஹணங்களான புராணங்கள் காட்டும் வழியில் அவதாரங்களில் வைத்துப் பேசி ஸ்தாபிக்கிறார். அவன்தான் பரமபுருஷன் என்பதோடு நில்லாமல் அவனையன்றி வேறு பரமன் இல்லை என்று வலியுறுத்துகிறார்.

**திண்ணன்வீடு முதல் முழுதுமாய்**
**எண்ணின் மீதியன் எம்பெருமான்**
**மண்ணும் விண்ணுமெல்லாம் உடனுண்ட நம்**
**கண்ணன் கண்ணல்லது இல்லையோர் கண்ணே.**

கண்ணன் என்றது ஸ்ரீகிருஷ்ணனை—கண்ணபிரானை. நம் கண்ணனே கண். (இறைவன்—முதல்வன்) அல்லது (அவனை யன்றி) இல்லை ஓர் கண். இந்தக் கண்ணன், திண் நல்வீடு முழுதும் ஆய் (நித்யமான பெருவீடு முதலாக எல்லாவற்றை யும் அளிக்கக் கூடியவனாய்), எண்ணின் மீதியன் (எண்ணத் திற்கு — மனத்திற்கு — அப்பாற்பட்டவன்); எம்பெருமான் மண்ணும் விண்ணும் எல்லாம் உடன் உண்டவன். ப்ரளய தசையில் உலகங்கள் யாவற்றையும் உண்டு (ஸம்ஹரித்து), தன் வயிற்றில் வைத்து காத்து (ரக்ஷித்து) பின்னர் வெளி நாடு காண உமிழ்பவன் (ஸ்ருஷ்டிப்பவன்) ஆகையால் ஜகத் காரணவஸ்து வாகிறான். இப்படிக் காரணனாகவும் காப் பவனாகவும், நல்வீடு தந்து உஜ்ஜீவிப்பவனாகவும் உள்ள ஒப்புயர்வற்ற நம் ஸ்வாமி நம் கண்ணனே யன்றி வேறு யாருமல்ல. *மாபாவம் விட அரற்குப் பிச்சைபெய் கோபால கோளரி ஏறு அன்றியே ஈபாவம் செய்து ஏழுலகும் அருளால் அளிப்பார் யார்? என்று நைகிறார் ஆழ்வார். ஏழுலகங்களிலுள்ளார் செய்துள்ள ஸமஸ்தபாபங்களையும் கேவலம் தம்மருளால் அழிக்கக்கூடிய ஸ்வாமி யார் உளர்? (ஈபாவம் செய்து - பாவம் ஈயச்செய்து - ஈதல் அழித்தல்) பல மாந்தர்களால் ஸ்வாமியாக அபிமானிக்கப்பட்ட சிவனின் (அரனின்) தகப்பன் தலையைக் கிள்ளி எடுத்த பெரும் பாபம் தொலையும்படி செய்த வலிமிக்க சிம்மான கோபாலனன்றோ இவன்? தன் தகப்பனான பிரமனின் ஐந்தாவது தலையை சிவன் கிள்ளி எடுக்க, அத்தலையோடு சிவன் கையில் ஒட்டிக் கொண்டது. சிவனும் கபாலமுடைக் கையனாய் அது நிறைந்து கைவிட்டு விலகும் வரை பிச்சை ஏற்கும்படியாயிற்று. வதரியாச்சிரமத்தில் நாராயணன்

பிச்சையிட அக்கபாலம் நிரம்பி அங்கு சிவன் கையினின்றும் விலகியதாகப் புராண வரலாறு.

*மேல் தன்னை மீதிட நிமிர்ந்து (மேலுலகங்களுக்கும் மேலே வளர்ந்து) மண்கொண்ட (மண்ணும் விண்ணும் அளந்து கொண்ட) மால் தன்னில் மிக்குமோர் தேவும் உளதே? *தேவும் எப்பொருளும் படைக்க (படைப்பதற்காக) பூவில் நான்முகனைப் படைத்த தேவன் எம்பெருமானுக்கல்லால் பூவும் பூசனையும் தகுமே? *கோலத் தாமரைக் கண்ணன் எம்மான் மிகுஞ்சோதி மேலறிவார் எவரே? இவன் பரம்பொருள் என்று காட்டித்தருவது இவனுடைய அழகிய விசாலமான தாமரை போன்ற கண்கள். தாமரைக் கண்ணனான எம்பெருமானிலும் மேலான ஒரு தத்துவத்தை அறிந்தவர் யாருளர்? தத்துவமிருந்தாலன்றோ அறிய முடியும்? இவனுக்கு மேலான பரம்பொருள் யாருமே இல்லை என்கிறார்.

*கருத்தில் தேவும் எல்லாப் பொருளும் வருத்தித்த மாயப்பிரானை, கள்வா! எம்மையும் ஏழுலகும் நின்னுள்ளே தோற்றிய இறைவ; என்று வெள்ளேறன், நான்முகன், இந்திரன், வானவர் (யாவரும்) புள்ளூர்தி கழல் பணிந்து ஏத்துவரே*. கேவலம் தன் கருத்தினால் (ஸங்கல்பமாத்ரத்தாலே) ஸமஸ்தபதார்த்தங்களையும் வருத்தித்த (உண்டாக்கின)ஆச்சர்யசேஷ்டிதனான புள்ளூர்த்தி(கருடவாகனன்) சிவன், பிரமன், இந்திரன், மற்றைய தேவர்கள் யாவரும், ''கள்வா! எம்மையும் எமக்கிடங்களான உலகங்களையும் உன் எண்ணத்தினாலேயே தோற்றுவித்த ஜகத்ஸ்வாமியே!'' என்று துதிப்பார்கள். பிறர் அறியாதபடி மறைத்துக் காரியம் செய்பவன் கள்வன். அவன்படிகளை யாருமே கண்டறியமுடியாதன்றோ! எல்லா தெய்வங்களும் அவன் திருவடிகளில் தம்தலைமடுத்து, ''இறைவா'' என்று துதிக்கையாலே அவனே (கருடவாகனனான கண்ணனே) ஸர்வஜ்

மாத்பரன் என்பது குன்றினுச்சியில் விளக்காய் விளங்குகிற தல்லவா? மேலும் அருளிச்செய்யப்புகுகிறார் ஆழ்வார்:

**அணைவது அரவணைமேல் பூம்பாவையாகம்**
**புணர்வது இருவரவர்முதலும் தானே**
**இணைவனும்எப்பொருட்கும் வீடுமுதலாம்**
**புணைவன பிறவிக்கடல் நீந்துவார்கட்கே.**

நித்யவிபூதியில் (பரமபதத்தில்) திருவநந்தாழ்வான் மீது பள்ளிகொண்டு பெரியபிராட்டிக்குத் தனிக்கேள்வனாய் விளங்காநின்றான். அவர் இருவர் என்று ப்ரஸித்த தேவர்களான பிரமன் சிவன் இருவருக்கும் முதலாய் (காரணமாய்) உள்ளவன். எப்பொருட்கும் இணைவனும்-முதலவதாரத்தில் சிவனுடனும் அயனுடனும் ஒக்க விஷ்ணுவாய் வந்து பிறந்தது போல எல்லாப்பொருள்களோடும் ஒக்கத் தன்னைத் தாழவிட்டுக்கொண்டு பசு, பக்ஷி, மனிதர், ஆமை, மீன், கேழல், மா, இவைகள் நடுவிலும் ஸஜாதியனாய் வந்து பிறப்பவன். இதற்குப் பலன் என்னவெனில்; பிறவிக்கடல் நீந்துவார்க்குப் புணைவன்; வீடு முதல் ஆம் பிறவிக் கடலைக் கடக்க ஆசைப்படும் முமுக்ஷுவுக்குத் தெப்பமாக இருந்து மோக்ஷமளிப்பவன்—ஒருபக்ஷி என்று பாராமல் ஒரு பிசாசு என்று நோக்காமல் யாவருக்கும் மேல்வீடு தரவல்லவன் நம் கண்ணன் ஒருவனே. *மாவாகி ஆமையாய் மீனாகி மானிடமாம் தேவாதி தேவபெருமான் என் தீர்த்தனே* தீர்த்தன்—பரிசுத்தன்—நம்மை பாவமற்று பரிசுத்தமாக்க வல்லவன். இந்த தீர்த்தன்தான், *ஒவாத் துயர்ப்பிறவி உட்படமற்றெவ்வெவையும் மூவாத்தனி முதலாய் மூவுலகும் காவலோன்* தொடர்ந்து துக்கம் தரும் பிறவி முதலாக எல்லாவற்றிற்கும் மூவாத்தனி முதலாய் ''சோம்பாது இப்பல்லுருவையெல்லாம் படர்வித்த வித்தா!'' என்கிற படியே சோம்பிக்கைவாங்காது, படைத்தல் காத்தல் அழித்தல் எல்லாத்தொழில்களையும் தானே காரணனாய் இருந்து செய்து, மூன்று உலகங்களையும் ரக்ஷிப்பவன்.

மேலும், மஹாபாரதத்தில் கண்ட இவன் பெருமை ஒருவரால் பேசித் தலைக்கட்ட இயலுமோ?

**தீர்த்தன் உலகளந்தசேவடிமேல் பூந்தாமம்**
**சேர்த்திஅவையே சிவன்முடிமேல்தான் கண்டு**
**பார்த்தன் தெளிந்தொழிந்த பைந்துழாயான் பெருமை**
**பேர்த்தும் ஒருவரால் பேசக்கிடந்ததே?**

பார்த்தன் (அர்ஜுனன்) பாரதச்சமரில் பாசுபதாஸ்த்ரம் வேண்டிச் சிவனை ஆராதிக்கப்புக, ருத்ரனிடம் செய்யும் பூஜையைத் தன் திருவடிகளிலே செய்து பயன் பெறுமாறு கண்ணன் நியமிக்க, அப்படியே கண்ணன் தாளில் பூவிட்டு அர்ச்சித்தவன் அன்றிரவு கனவிலே தாளிட்ட பூவை முடிமேல் தாங்கி வந்து சிவன் பாசுபதம் நல்கியதைக் கண்டு, கண்ணனே பராத்பரன் என்று தெளிவு பெற்றதைச் சொல்லுகிறார். எம்பெருமான் உலகளந்த போது அவன் திருவடி விளக்கிய ஸ்ரீ பாததீர்த்தத்தினால் ருத்ரன் புனிதனாகி சிவனானான் என்ற வரலாறும் இங்கு காட்டப் பெறுகிறது.

**சீர்மைகொள்வீடு சுவர்க்கம் நரகீறு**
**ஈர்மைகொள் தேவர்நடுவா மற்றெப்பொருட்கும்**
**வேர்முதலாய் வித்தாய்ப் பரந்து தனிநின்ற**
**கார்முகில்போல்வண்ணன் என்கண்ணனைக் கண்டேனே.**

வேர், முதல், வித்து என்றது பகவான் (உபாதான, நிமித்த, ஸஹகாரி என்ற) மூன்று வித காரணங்களும் தானேயாய் உள்ளதைச் சொல்லுவது. பரந்து என்று எங்கும் வியாபித்து ஸர்வாந்தர்யாமியாய் நிற்பதைச் சொல்லுகிறது. இப்படிப்பட்ட காரணமோ நீலமேக வண்ணனான கண்ணன். மேலான மோக்ஷம், அதற்குத் தாழ்ந்த சுவர்க்கம், தண்டனை அளிக்கும் நரகம் எல்லாம் இவனிட்ட வழக்காய் உள்ளன. இப்படிப்பட்ட தனிப் பெருந்தெய்வமான கண்ணனை நான் கண்டு கொண்டேன் என்று களிக்கிறார் ஆழ்வார். நமக்கும் உபதேசமாகிறது. (தொடரும்)

அறிமுகம் (2)

# வங்கிப்புரத்து நம்பி

ஆயிரம் வருடங்களுக்கு முன்னர் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சி அது—

திருவரங்கத்தில் நம்பெருமாள் பேரோலக்கமாக ஒரு மணிமாமண்டபத்தில் எழுந்தருளியிருக்கிறார். நம்பெருமாளைச் சேவிப்பதற்காகப் பாகவதர் சமுதாயம் திரண்டு வந்திருக்கிறது. ஸ்ரீவைஷ்ணவ ஆசாரியர்களான முதலிகளும் வேத வேதாந்த வித்தகர்களான பிராம்மணர்களும் ஒருபுறம் சேர்ந்து நின்று நான்மறைகளோதித் தொழுகின்றனர். மற்றொரு புறம் பெண்களும் பேதைகளும், அபலைகளும், ஆயர் சிறுமியர்களும் கூடி நின்று வணங்குகின்றனர்.

---

பேராசிரியர் இரா. அங்கராஜன், M.A., B.T.

---

அர்ச்சகர் பயபக்தி சிரத்தைகளுடன் நம்பெருமாளுக்குத் திருவந்திக் காப்பு உபசாரம் நிகழ்த்துகிறார்.

அந்த சமயம் வங்கிப் புரத்து நம்பி பெருமாளைச் சேவிக்க எழுந்தருளினவர் சுற்று முற்றும் நோக்கிக் கடுகி நடந்து பெண்டிர் பகுதியிலே இடைச்சிகளான சிறுமியர்கள் அருகிற் புகுந்து நின்று அங்கிருந்தே நம்பெருமாளை வைத்த கண் வாங்காது கண்களாற் பருகிறார்.

எதிர்கோஷ்டியில் ஸ்ரீவைஷ்ணவர் திரளுக்குத் தலைமை பூண்டு நடுநாயகமாக எழுந்தருளியிருந்த முதலியாண்டான் நம்பியைப் பார்த்து விட்டார். அவரைத் தம் அருகில் அழைத்தார்.

"நம்பி, இப்புறம் உத்தேச்யமான ஸ்ரீவைஷ்ணவ சமுதாய மிருக்க, அதை உதாசீனப்படுத்தி அங்கே பெண்களாகில் ஏன் எழுந்தருளினீர்?" முதலியாண்டான் குரலில் கடுமை வெளிப்பட்டது. கோஷ்டியை நிர்வஹிக்கும் ஸ்ரீ சேனாபதி துரந்தரராக அவர் எம்பெருமானாரால் நியமிக்கப் பட்டிருந்தார். நம்பி என் சொல்வாரோ என்று எல்லோரும் அஞ்சினர்.

வங்கிப் புரத்து நம்பி அஞ்சவில்லை. முதலியாண்டானை உற்று நோக்கினார்:

"ஆண்டான்! நாம் எல்லோரும் உயர் குடியிலே பிறந்தோம்; உயர்ந்த வேதங்களை ஓதி அனுஷ்டான பரராயிருக்கிறோம் என்ற இறுமாப்பு நெஞ்சை விட்டு அகலவில்லை. ஆனால் அதோ, எதிர் வரிசையில் நிற்கும் இடைச்சியரோ ஒன்றும் அறியாத அபலைகள். அவர்களிடத்தில் குலச் செருக்கோ பொருட்செருக்கோ கல்விச் செருக்கோ தினையளவும் இல்லை. கோஷ்டியில் காலந்தாழ்த்துப் புகுந்த அடியேன் நம்பெருமான் திருமுகமண்டலத்தை ஒரு க்ஷணம் சற்று நோக்கினேன். திருவரங்கரின் அருட்பெருக்கு பள்ளத்தில் பாயும் வெள்ளம் போல் பிரவஹித்து ஆய்ச்சியரை நோக்கிப் பாய்ந்தது! அதனாலேயே பள்ளமடையான பக்கத்திலே நின்று பகவத்கடாட்சத்தைப் பருகுவதற்கு முயன்றேன். குற்றமானால் பொறுத்தருள வேண்டும்."

நம்பியின் பகவத் வைபவ ஞானத்தைக் கண்டு ஆண்டான் ஆச்சரியம் அடைந்தார். ஆண்டானால் அவர் மீது குற்றஞ் சாட்ட முடியவில்லை. இறுதியாக ஒன்று கேட்டார்.

"வாரீர், நம்பியே! நம் பெருமானைத் தொழுது ஏத்தும் போது இடைச்சிமார்கள் என்ன மொழிந்தனர்? நீர் அருளிச் செய்தது என்ன?"

நம்பி விளக்கினர்.

பெண்கள் அனைவரும் எப்படி நம் பெருமானைத் தோத்திரஞ் செய்தனர் தெரியுமா?

"பால் உண்பீர் பழம் உண்பீர்
பொன்னாலே பூணூல் இடுவீர்
நூறு பிராயம் புகுவீர்
அழுத்த இரட்டை உடுப்பீர்!"

நாங்கள் அறிந்த ஒரு கிராமியப் பாடலை அழகு தமிழில் இசையுடன் பாடினர். "பிரானே, பாலும் பழமும் உண்டு, ஒரு குறைவும் இல்லாமல் பொன்னாலே செய்த பூணூலை அணிந்து அழகிய பீதாம்பரங்களை அணிந்து கொண்டு நூறு பிராயம் வாழ்க்கடவீர்!" என்று இறைவனுக்குப் பல்லாண்டு பாடினார்கள். இதை நம்பி ஆண்டானிடம் விரித்துரைத்தார்; ஆண்டான் மனம் இளகி விட்டது.

"நம்பி, அவர்கள் சொன்ன பாடல் இருக்கட்டும், நீர் அவர்கள் அருகே இருந்தீரே, என்ன வார்த்தை சொல்லி நம் பெருமானைத் தோத்திரம் செய்தீர்?"—நம்பியின் உள்ளப் பாங்கைச சோதிப்பதற்காக இப்படி ஒரு கேள்வியை விடுத்தார் முதலியாண்டான். நம்பியும் தாம சொன்னதை மறைக்காமல தெரிவித்தார்.

"ஸ்வாமி! அடியேன் 'விஜயீபவ' 'விஜயஸ்வ' என்று வாழ்த்தினேன்"

முதலியாண்டான் துணுக்குற்றார். சோகமும் தழுதழுப்பும் நிறைந்த குரலில்,

"நம்பி! அங்கே பேசும் முரட்டு ஸம்ஸ்க்ருதத்தை விட்டிரில்லையே! எங்கே இருந்தாலும் நம்முடைய ஸ்வபாவம்

விடுகிறதா? இங்கே வாரும்'' என்று கூறி நம்பியை அணைத்துக் கொண்டார். இறைவனைப் போற்றிப் பல்லாண்டு பாடுவதற்கு முரட்டு ஸம்ஸ்க்ருதத்திலும் எளிய தமிழ்ச் சொல்லே ஏற்றது என்பது ஆண்டாளின் திருவுள்ளம். இறைவனுடைய திருவருள் மூவகைச் செருக்குகளும் அடியோடு அழிந்த இடத்தை நோக்கியே விரைந்து பாயும் என்பதை வங்கிப்புரத்து நம்பி அனுஷ்டித்துக் காட்டினார். முதலியாண்டானே அத்திருவருளைச் சொல்வலம் மிக்க தமிழ்ப் பாசுரங்களே தோற்றுவிக்கும் என்பதை உலகிற்கு உணர்த்தினார்.

உண்மையில் நடந்த இந்நிகழ்ச்சியைத்தான் நம்பிள்ளை பக்தர்கள் அன்பாரத் தமது சொல்வலத்தால் தலைத்தலைச் சிறந்து பூசிப்பதற்கு எடுத்துக்காட்டாக "எங்கள் கண் முகப்பே (9-2-8) என்ற திருவாய்மொழிப் பாசுரத்தின் ஈட்டில் இடம்பெறச் செய்திருக்கிறார்.

அன்பும் அருளும் அடக்கமும் வடிவெடுத்த வங்கிப்புரத்து நம்பியை எம்பெருமானார் தம்முடைய அந்தரங்க சிஷ்யராக ஏற்றுக் கொண்டார். மேலும் எழுபத்து நான்கு சிம்மாசனாதிபதிகளில் ஒருவராக அபிமானித்து அங்கீகரித்தருளினார். ஆசார்ய கைங்கரியமே பரமப்ரயோஜனம் என்ற கொள்கையுடன் வங்கிப்புரத்து நம்பி எம்பெருமானார் மடத்தில் கிடாம்பி ஆச்சானுடன் தாமும் தளிகைத் திருவமுது திருத்தும் பணியைச் செய்து வந்தார்.

நம்மாழ்வாரை பகவதவதாரமாகவே மதித்து அருளிச் செயல்களில் அனவரதமும் ஈடுபட்டுப் பல அரிய அர்த்த நிர்வாஹங்களையும் வங்கிப்புரத்து நம்பி வழங்கியிருக்கிறார். அவற்றை எல்லாம் நம்பிள்ளை நமக்காக ஈட்டில் சேமித்து வைத்திருக்கிறார்.

அடுத்த இதழில், நம்பியின் சிஷ்யராய் அருளுக்கோர் உறைவிடமாகத் திகழ்ந்த சிறியாத்தானைச் சந்திக்கலாம்!

# ஸ்ரீமத் பகவத் கீதை

## இரண்டாம் அத்யாயம்

**வேதாவிநாசிநம் நித்யம் ய ஏநமஜமவ்யயம்**
**கதம் ஸ புருஷ : பார்த்த கம் காதயதி ஹந்திகம்**

பார்த்தனே! அழிவில்லாதவனையும் பிறப்பில்லாதவனையும் மாறுதலில்லாதவனையுமுள்ள நித்யனை இந்த ஆத்மாவை எவன் அறிகின்றான்; அந்த புருஷன், மக்கள் தேவர் திர்யக்குத் தாவரம் என்கிற நால்வகைப் பிறப்பினுள் நின்ற ஆத்மாக்களுள் எவனை எவ்வாறு அழிவிக்கின்றான்; எவனை எவ்வாறு அழிக்கின்றான்?

எவன் எவனை, எப்படி அழிக்கின்றான்; எப்படி அழிக்கச் செய்கின்றான் என்பது கருத்து.

''அவிநாசிநம் அஜம்'' என்பன ஆத்மா பிறப்பு இறப்பு என்கிற மாறுதல்களில்லாதவன் என்பதை உணர்த்துகின்றன; ஆதலால், ''அவ்யயம்'' என்பது அவையொழிந்த ஏனைய மாறுதல்களில்லாதவன் என்பதைத் தெரிவிப்பதாகக் கொள்ளுதல் வேண்டும். அதாவது; துண்ணியமாறுதல், தேய்தல், துண்டுபடுதல் முதலியன இல்லாதவன் என்பதைத் தெரிவிக்கின்றது என்று கொள்ளலாம். எனவே; நித்யனுயுள்ள ஆத்மாவை, எவனும் எவ்வகையாலும் கொல்லுதல் செய்யான்; கொல்வித்தல் செய்யான் என்பதை உணர்த்தினையிற்று.

ஆத்மா நித்யனுகையால், அவனை அறியாதவனும் கொல்லுதல் கொல்வித்தல் செய்ய இயலான் என்பது திண்ணம். அங்ஙனமிருக்க, 'ஆத்மாவை அறிகின்றவன்' என்று ஒருவனைச் சிறப்பித்தது எதற்கு? என்று தோன்றலாம். இந்த சுலோகத்தில் ''கதம் கம் காதயதி; கதம் கம் ஹந்தி'' என்று கூறியுள்ளான்; இதனால், கொல்லுதல் கொல்வித்தல் என்பது மாத்திரம் இல்லையென்று விலக்கப்

படவில்லை; பின்னேயோவெனின்; கொலையினுல் ஏற்படும் வருத்தமும் கொலை செய்யும் விதமும் இல்லையென்று விலக்கப்படுகின்றன. ஆகையால் ''இந்த ஆத்மாக்களை யெல்லாம் பிறரைக்கொண்டு கொல்லுவிக்கின்றேமே! இவர்களைக் கொல்லுகின்றேமே என்று வருந்திய அர்ச்சுனனைத் தெளிவித்தற்கு, 'இந்த வருத்தம் ஆத்மாவின் நிலையை நன்கு உணராமையால் வந்ததாம்' என்று காட்டியுள்ளான் எம்பெருமான் என்பது கருத்தாம். இங்ஙனம் பொருள் கொள்ளாவிடின் ''கதம்'' என்ற சொல்லிற்குப் பொருளின்றி ஒழியும்.

**வாஸாம்ஸி ஜீர்ணானி யதா விஹாய நவானி க்ருஹ்ணாதி**
**நரோ:பராணி**
**ததாஶரீராணி விஹாய ஜீர்ணாந்யந்யானி ஸம்யாதி நவானி தேஹீ**

ஒருவன் கிழிந்த பழையவுடைகளை விடுத்து, நல்ல புதியவுடைகளை உடுக்கின்றுன்; அப்படிப்போல, ஆத்மா ஜீர்ணமான பழைய சரீரங்களை விடுத்து, நல்ல புதிய சரீரங்களைப் பெறுகின்றுன் என்பது பொருள்.

நித்யர்களான ஆத்மாக்களுக்கு சரீரங்களை விடுகை மாத்திரம் உள்ளதாயினும், நல்ல இன்ப சாதனமான சரீரங்களை விடுவதில் அவர்களுக்கு வருத்தம் ஏற்படாதா? பழைய சரீரம் கழிந்தால் உடனே நல்ல புதிய சரீரம் கிடைக்கும் என்று எங்ஙனம் நிச்சயிக்க வியலும்? துன்பந்தரத்தக்க மிருக சரீரம் அல்லது பக்ஷி சரீரம் அன்றி நரகானுபவத்திற்குரியயாதனுசரீரம் இவை முதலியன வரமாட்டா என்று எங்ஙனம் நினைக்கவியலும்! என்று சந்தேகமடைந்த அர்ச்சுனனைத் தெளிவிக்கின்றுன் பகவான். தர்மயுத்தத்தில் மாண்டவர்களுக்கு உடனே மிக்க இன்பந்தரத்தக்க தேவசரீரம் கிடைக்கும் என்று சாஸ்த்ரம் கூறுகின்றபடியால் அதைக் குறித்தும் கவலைப்பட வேண்டாம் என்கிறுன். மகிழ்ச்சியை அடைய வேண்டிய விஷயத்தில் கவலைப் படலாமா? என்று கூறுவது இதன் கருத்து.

# ஆண்டாள்

**தாத்தா :** குழந்தைகளே! இன்று நான் உங்களுக்கு ஒரு கதை சொல்லப் போகிறேன். எல்லோரும் வாருங்கள்.

**கண்ணன் :** நீங்கள் என்ன கதை சொல்லப் போகிறீர்கள் என்பதை நான் சொல்லட்டுமா தாத்தா?

**தாத்தா :** ம்! சொல்லு பார்க்கலாம்.

**கண்ணன் :** இது ஆடி மாதமில்லையா? அதனால் ஆடிப் பூரத்தன்று அவதரித்த ஆண்டாளின் கதையைத் தானே கூறப்போகிறீர்கள்.

**தாத்தா :** சரியாகச் சொன்னாய் கண்ணா. முன்பே ஒரு முறை நான் உங்களுக்கு ஆண்டாள் கதையைச் சொல்லியிருந்தாலும், இப்போது மேலும் பல விவரங்களைச் சேர்த்துச் சொல்லப் போகிறேன். உங்களுக்கு ஆண்டாளைத் தெரியுமில்லையா? கோதையைத் தெரியுமோ?

**ஸ்ரீதேவி :** ஆண்டாள்தானே கோதை தாத்தா.

**தாத்தா :** ஊகூம்! கோதைதான் ஆண்டாள்.

**நாராயணன் :** என்ன தாத்தா சொல்கிறீர்கள்?

## பூமிகா

**தாத்தா :** பெரியாழ்வார் கண்டெடுத்த பெண் கோதைதான். அவளுக்கு ஆண்டாள் என்ற பெயர் எப்படி வந்தது என்று கூறுகிறேன் கேளுங்கள்.

**கண்ணன் :** சொல்லுங்கள் தாத்தா! எங்களுக்கு கேட்க ஆசையாக உள்ளது.

**தாத்தா :** ஒரு நாள் விஷ்ணுசித்தர் என்ற பெரியாழ்வார் திருத்துழாய்ச் செடி நடுவதற்காக, ஸ்ரீவில்லிபுத்தூரில் தம் நந்தவனத்தைக் கொத்தும் போது, அந்த இடத்தில் ஒரு பெண் குழந்தையைக் கண்டார்.

**நாராயணன் :** அந்தக் குழந்தை ஆண்டாள் தானே தாத்தா.

**தாத்தா :** ஆம். பெரியாழ்வாருக்கோ குழந்தையில்லை. அதனால் இந்தக் குழந்தையைத் தாம் எடுத்து வளர்த்த தோடு, கோதை என்ற பெயரும் இட்டார்.

**ஸ்ரீதேவி :** அப்புறம் எனக்குத் தெரியும் தாத்தா, நான் சொல்லட்டுமா.

**தாத்தா :** எங்கே சொல்லு பார்க்கலாம்.

**ஸ்ரீதேவி :** பெரியாழ்வார் கோதைக்கு எல்லாவித கல்விகளையும் கற்பித்தார். கோதையும் நாளொரு மேனி பொழுதொரு வண்ணமாக வளர்ந்து வந்தாள். தினமும் பெரியாழ்வார் வடபெருங்கோயிலுடையானுக்கு அணிவிப் பதற்காகப் பூக்களைத் தாமே பறித்து, மாலை தொடுத்து வைப்பார். அதனை அவர் இல்லாத சமயம் பார்த்து தன் கழுத்தில் அணிந்து, கண்ணாடி முன் நின்று கொண்டு தான் எம்பெருமானுக்கு ஏற்றவளா? என்று அழகு பார்த்து விட்டு, அதனை நலுங்காமல் அப்படியே வைத்து விடுவாள்.

**நாராயணன் :** மீதியை நான் சொல்கிறேன் தாத்தா!

**தாத்தா :** பரவாயில்லையே உங்களுக்குக் கூட ஆண் டாளின் கதை தெரிந்திருக்கிதே.

**நாராயணன் :** ஒரு நாள் அவ்வாறு செய்து கொண்டி ருக்கும் போது உள்ளே வந்த பெரியாழ்வார், அதைப் பார்த்து அவளைக் கோபித்து "ஐயோ,! கோதாய், என்ன காரியம் அம்மா செய்து விட்டாய்! எம்பெருமானுக்கு வைத் திருந்த மாலையை நீ அணிந்து விட்டாயே! அவன் அணிந்த மாலையை நாம் அணியலாமே 'தவிர நாமணிந்த மாலையை அவன் அணிவதா? இன்று வேறு மாலையும் இல்லையே" என்று அழுது விட்டார்.

**கண்ணன் :** அப்படியானால் அன்று பெருமானுக்கு மாலை சாத்தவில்லையா?

**தாத்தா :** ஆம்! அன்று எம்பெருமானுக்கு மாலை சாத்தவில்லை. ஆனால் அன்றிரவே திருமால், பெரியாழ்வார் கனவில் தோன்றி ''இன்று ஏன் எனக்கு மாலை சாத்தவில்லை?'' எனக் கேட்க, பெரியாழ்வார் தம் மகள் செய்த செய்கையைக் கூற, திருமாலும் 'அவள் அணிந்த மாலை தான் மிக்க மணமுடனும், பொலிவுடனும் உள்ளது. ஆகையால் இனிமேல் அவள் சூடிக்களைந்த மாலைகளையே கொண்டு வாரும்' என்று கூறினர்.

**ஸ்ரீதேவி :** தாத்தா ஒரு சந்தேகம். சிறியவர்கள் அணிந்த மாலையைப் பெரியவர்கள் அணிந்து கொண்டால், அவர்களுக்கு ஆயுசு குறையும் என்பார்கள் இல்லையா? அப்படியிருக்க ஆண்டாள் அணிந்த மாலையைத் திருமால் அணிந்து கொண்டால் அது தப்பில்லையா?

**தாத்தா :** நன்றாகக் கேட்டாய். உன் சந்தேகத்தை நான் தீர்த்து வைக்கிறேன். திருமால் எல்லாவற்றையும் அறியும் வல்லமை படைத்தவனல்லவா! எம்பெருமானுக்கு ஆண்டாள் தன் தர்ம பத்தினியாக வரப்போகிறள் என்பது தெரியும். அது இருக்கட்டும். நீங்கள் திருமணங்களுக்குச் சென்றிருக்கும் போது, அங்கே கல்யாணப் பெண்ணும் பிள்ளையும் மாலை மாற்றிக் கொள்வதைப் பார்த்திருக்கிறீர்களா?

**கண்ணன் :** ஓ! பார்த்து இருக்கிறோம் தாத்தா.

**தாத்தா :** அந்தப் பழக்கமே இந்த ஆண்டாளினல் தான் ஏற்பட்டது. அதாவது கணவனை விட மனைவி சிறியவளாக இருந்தாலும், ஒருவருக்கொருவர் அன்பு செலுத்துவதிலே இருவருடைய மனமும் சமமாக இருப்பதால், கணவனும் மனைவியும் மாலை மாற்றிக் கொள்கிறார்கள். அதனால் ஆண்டாள் அணிந்த மாலையை, திருமால் அணிந்து கொண்டதில் தவறேதும் இல்லையே!

**நாராயணன் :** இப்போது எங்களுக்கு நன்றாகப் புரிகிறது தாத்தா. ஆனால் கோதைக்கு ஆண்டாள் என்ற பெயர் எப்படி வந்தது என்று கூறவில்லையே!

**தாத்தா :** அவள் பருவ வயது வந்ததும் பெரியாழ்வார் அவளுக்குத் திருமணம் செய்ய எண்ணினார். ஆனால் ஆண்டாளோ கண்ணன் மீது ஆழ்ந்த காதல் கொண்டு, அவனையே கணவனாக அடையத் தீர்மானித்தாள். அனைத்துலகுக்கும் அன்னையாய் ஆண்டு வருகிற பூமிதேவியின் அவதாரமாகையாலே ஆண்டாள் என்று பெயர் பெற்றாள் என்பர் சிலர். எம்பெருமானிடத்து மிகுந்த பக்தி கொண்டு ஆழ்ந்தாள் என்பதால் ஆண்டாள் எனப்பட்டாள் என்றும் சிலர் கூறுவர். இவ்வாறு ஆண்டாள் பகவானையே கணவனாக அடைய விசேஷ நோன்பும் நோற்றாள்.

**கண்ணன் :** அது திருப்பாவை நோன்பு தானே தாத்தா.

**தாத்தா :** ஆம். ஸ்ரீ வைஷ்ணவன் என்பதற்கு அடையாளமாக நீங்களும் திருப்பாவையைத் தினமும் சொல்ல வேண்டும். அப்படிச் சொல்ல இயலாதவன் 'சிற்றஞ் சிறுகாலே என்ற ஒரு பாசுரமாவது சொல்ல வேண்டும். அந்த ஒரு பாசுரமே திருப்பாவை முழுதும் சொன்னதின் பலனைக் கொடுக்கும்' என்று பெரியவர்கள் சொல்லுவார்கள்.

**குழந் :** சரி தாத்தா! நீங்கள் சொன்னபடியே, இனிமேல் நாங்கள் தினமும் திருப்பாவை சொல்கிறோம்.

**தாத்தா :** நான் உங்களுக்கு ஓர் அதிசயத்தைக் கூறப் போகிறேன். அதாவது ஆண்டாளுக்கு ஒரு அண்ணன் உண்டு தெரியுமோ?

**ஸ்ரீதேவி :** என்ன தாத்தா சொல்கிறீர்கள், நீங்கள் சொல்லுவது புதுமையாய் இருக்கிறதே. ஆண்டாள் பெரியாழ்வாருக்கு ஒரே பெண் தானே.

**தாத்தா :** நான் கூறுவதைக் கேளுங்கள். திருமாலிரும் சோலையில் எழுந்தருளியுள்ள அழகருக்கு, ஆண்டாள் நூறு தடா வெண்ணெயும், நூறு தடா அக்கார வடிசிலையும்

வாயாலே சொல்லி, அதனை எம்பெருமான் ஏற்றுக் கொள்வானா? என்று நாச்சியார் திருமொழியில் 'நாறு நறும் பொழில்' என்ற பாட்டில் கூறியிருக்கிறாள்.

**ஸ்ரீதேவி :** என்ன தாத்தா நீங்கள்? ஆண்டாளின் அண்ணனைப் பற்றிக் கூறாமல் ஏதேதோ சொல்லிக் கொண்டு இருக்கிறீர்கள்.

**தாத்தா :** இரு அவசரப் படாதே. அவள் அந்த மாதிரி சொன்னதை நிறைவேற்ற எண்ணி வெகு காலத்திற்குப் பிறகு எம்பெருமானார் நூறு தடா வெண்ணெயும், நூறு தடா அக்கார வடிசிலையும் திருமாலிருஞ்சோலையில் எழுந்தருளியுள்ள அழகருக்கு, ஸமர்ப்பித்து விட்டு, திரும்பி வரும் வழியில் ஸ்ரீவில்லிபுத்தூருக்குச் சென்று ஆண்டாளைச் சேவிக்கச் சென்ற போது, ஆண்டாள் அர்ச்சா சமாதியைக் கடந்து, ஓடி வந்து எம்பெருமானாரைக் கட்டிக் கொண்டு ''எம் அண்ணரே'' என்று உகப்புடன் கூறினாள்.

**நாரா :** அப்படியானால் எம்பெருமானார்தான் ஆண்டாளுக்கு அண்ணனா?

**தாத்தா :** ஆம்! தங்கையின் ஆசையைப் பூர்த்தி செய்பவனே அண்ணன். ஆண்டாள் வாயால் சொல்லி வைத்ததை, உடையவர் பூர்த்தி செய்ததால் அவர் ஆண்டாளுக்கு அண்ணன் தானே? அதனால் தான் ஆண்டாளின் வாழி திருநாமத்தில் 'பெரும்பூதூர் மாமுனிக்குப் பின்னானாள் வாழியே' என்று வாழ்த்தப் படுகிறாள். இப்போது புரிந்ததா?

**நாராயணன் :** நல்லது தாத்தா. நீங்கள் எங்களது சந்தேகத்தைப் போக்கினீர்கள். ஆனால் ஆண்டாளது கல்யாணத்தைப் பற்றி கூறவேயில்லையே.

**தாத்தா :** இப்போது அதைத்தான் கூறப் போகிறேன். பெரியாழ்வார் 'நீ யாரை மணக்க விரும்புகிறாய்? என்று

ஆண்டாளைக் கேட்க, அதற்கு அவள் 'மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்' என்று கூறுகிறாள்.

**ஸ்ரீதேவி :** எங்களுக்கு அர்த்தமே புரியவில்லை தாத்தா.

**தாத்தா :** அதாவது அந்த புருஷோத்தமனைத் (திருமாலை) தவிர வேறு யாராவது ஒருத்தருக்கு (மனுஷ்யர்) என்னைத் தாரை வார்த்துக் கொடுக்கலாம் என்ற பேச்சை, யாராவது ஒருத்தர் சொன்னால் கூட, அந்த நிமிஷமே உயிரை விட்டு விடுவேன் என்று கூறுகிறாள்.

**நாராயணன் :** அப்புறம்?

**தாத்தா :** பெரியாழ்வாரே 'இது எப்படி நடக்கும்?' எனக் கவலைப் பட்டுக் கொண்டிருக்க, எம்பெருமான் அவர் கனவில் தோன்றி 'நீர் உம் மகளை அழைத்துக் கொண்டு ஸ்ரீரங்கம் கோவிலுக்கு வாரும்; அவளை நானே கல்யாணம் செய்து கொள்கிறேன்' எனக் கூற, பெரியாழ்வாரும் கவலையை விடுத்து, தம் பெண்ணான ஆண்டாளை, முத்துப் பல்லக்கிலே, கோவிலுக்கு அழைத்துச் செல்ல, திருமாலும், 'வாரணமாயிரம்' என்ற பதிகத்தில் ஆண்டாள் விரும்பியது போலவே மணம் செய்து கொண்டு, அவள் கண்ட கனவை நனவாக்கினார்.

**குழந் :** ஆண்டாள் கதையை இவ்வளவு அழகாகச் சொன்ன உங்களுக்கு நன்றி தாத்தா.

**தாத்தா :** இருங்கள் முக்கியமானதைக் கேட்காமல் நன்றி சொல்லி விட்டீர்களே? ஆண்டாள் தானும் புகழடைந்ததோடு, தன் தந்தையையும் புகழடையச் செய்தாள். அது போலவே நீங்களும் நல்ல புகழோடும், பெருமையுடனும் விளங்குவதோடு மட்டுமல்லாமல் உங்களைப் பெற்றவருக்கும் புகழைத் தேடித் தரவேண்டும். உங்களுக்கு எனது நல் ஆசிகள். அடுத்த மாதம் சந்திப்போம்.

# திருவரங்கன் உலா

ஸ்ரீவேணுகோபாலன்

## 12. அரங்கனும் ஆண்டியானான்!

பஞ்சுகொண்டான் குலசேகரனைப் போரில் ஈடுபடுத்தின போது அவன் தாயாரை பத்திரமாக மடைப் பள்ளியில் பாதுகாத்து வருவதாகக் கூறினார் அல்லவா? அதை இப்போது கவனிப்போம். அரங்கநகரை விட்டுப் பிரிய விரும்பாத பல மக்களும் தேவரடியார்களும் மடைப்பள்ளியில் தங்கியிருந்தனர். அவர்களில் வாசந்திகா என்பவளும் ஒருத்தி. இவள் யார்? ஓ! இவள்தான் குலசேகரன் முதன் முதலில் அரங்கநகருள் நுழைந்த போது அவன்மீது மோகிக் கொண்ட தேவரடியாள். இப்போது நினைவுக்கு வந்து விட்டதா?

அரங்கநகரும் வீழ்ந்து பஞ்சுகொண்டானும் திருநாட்டுக்கு எழுந்தருளியவுடன் தனது தாயாரைப் பார்க்க மடைப்பள்ளிக்குச் சென்ற குலசேகரன் தன் தாயார் இறந்து விட்டதை வாசந்திகா மூலம் அறிந்து மிகவும் வருந்தினான். ஒருவாறு வாசந்திகாவால் தேற்றப்பட்டு, அரங்கன் ஊர்வலத்தைத் தேடிப் புறப்பட்டான். டில்லி வீரர்களிடமிருந்து தப்பி ஆற்றின் கரையேறிய குலசேகரனும் வாசந்திகாவும் இருநாட்கள் வரை ஒரு ஈரங்கொல்லியின் (துணி வெளுப்பார்) வீட்டில் தங்கியிருக்க, மூன்றாம் நாள் ,குறளனும் அவர்களை தேடி வந்து சேர்ந்தான்.

ஒரு வாரம் சென்ற பிறகு பல இடங்களில் சுற்றி, வழி தடுமாறி, கடைசியில் ஒருவாறு அரங்கன் போன பாதையைக் கண்டு பிடித்து, அதை அனுசரித்து நடந்து ஒரு மாலையில் அரங்கன் ஊர்வலத்தைப் போய்ச் சேர்ந்தார்கள்.

ஊர்வலத்தைப் பார்க்கும் அளவில் அது பாதியாகக் குறைந்து போய், பெருமாளது திருப்பெட்டகங்கள் யாவும் காணுதிருக்கக் கண்டு, அருகிலிருந்த பரிசனங்களை ஏதென்று காரணம் கேட்டார்கள்.

பெட்டகங்கள் பறி போனதையும், அதனுல் ஊழியர்களில் முப்பது பேர்களைப் பிள்ளை உலகாசிரியர் திருப்பி அனுப்பி விட்டதையும் கேள்விப்பட்ட அவர்கள் துடிதுடித்து "பெருமாளுக்கு இப்படி எல்லாம் நேருமா?'' என்று மிகவும் வருத்தப்பட்டார்கள்.

பிறகு உலகாசிரியர் உடம்பு சரியில்லாமல் படுத்திருப்பதை அறிந்து, அவர் பக்கல் போய் குலசேகரனும் குறளனும் நின்ருர்கள். மெள்ள எழுந்து அமர்ந்த உலகாசிரியர் அவர்களை வரவேற்று, "அப்பா! குலசேகரா! திருவரங்கத்தை விட்டு அந்நியப் படைகள் போய் விட்டனவா?'' என்று ஆவலுடன் கேட்டார்.

"இல்லை சுவாமி! அங்கேயே அவர்கள் நிரந்தரமாகத் தங்கி விட்டார்கள்'' என்று கூறி நடந்த விருந்தாந்தங்களை எல்லாம் சொல்ல, ஆசிரியரும் திருஉள்ளம் வெதும்பி திருமுகம் கலங்கித் துக்கத்தோடு இருந்து விட்டார்.

பிறகு திருவரங்கன் பல்லக்கின் அருகில் குலசேகரன் செல்ல, அவன் வரவு கண்டு, "ரங்கா, ரங்கா... என்று ராஜகிளி சோகமாக மிழற்றி, இறக்கைகளை சடசடத்தது. அதைப் பார்த்த அவன் கண்ணில் நீர் படர்ந்து நின்றது.

பல்லக்கின் சித்திரத் துணிகள் கிழிந்திருப்பதையும் அதன் விதானங்கள் அங்கங்கே அடிபட்டு உடைந்திருப்பதை யும், எல்லா பகுதிகளிலும் தூசியும் மண்ணும் ஒட்டி ஒளி மங்கியிருப்பதையும் கண்டு மிகவும் நொந்து, ''பெரு மாளுக்கு விளக்கு வைக்கவில்லையா?'' என்று கேட்க ''எண்ணெய் ஏது ஐயா, திரி ஏது? எல்லாவற்றிற்கும் பணம் ஏது?'' என்று அருகிலுள்ளவர்கள் மறுமொழி கூறினார்கள்.

அவன் கலங்கி நிற்கும் வேளையில், ஒருவர் பல்லக்கின் திரையைத் திறந்து பெருமாளின் தரிசனம் காண்பிக்க, அவரைப் பார்த்த அவன் திடுக்கிட்டு அப்படியே உறைந்து விட்டான்.

முடியில் தங்கக் கிரீடமும், நெற்றியில் வைரத் திருநாம மும், செவிகளில் கர்ணப் பூக்களும், திருமார்பில் ரத்தின ஆரங்களும், பொன் சரங்களும், கை, கால், இடைகளில் பொன் ஆபரணங்களும் பூண்டு அதி கோலாகலமாகக் காட்சி தரும் அவர், எந்த நகைகளும் ஆபரணங்களும் இல்லாமல், கையகலத் துணி உடுத்தி, பருத்திப் பூணூலைக் குறுக்கிட்டுக் கொண்டு வெறுமையிலும் வெறுமையாய், எளிமையிலும்எளிமையாய்க் காட்சி அளித்தார்.

குலசேகரன் விக்கித்து நிற்கும் போதே, ''பெருமாள் காலையிலிருந்து அமுது செய்யவில்லை, அமுதுக்கு எதுவும் இல்லை'' என்று அருகிலுள்ளார் கூற, அப்படியே தாக்குண் டதுபோல் அதிர்ச்சியுடன் நின்றான் குலசேகரன்.

காலையிலிருந்து பெருமாளுக்கு அமுது படைக்கவில்லை என்ற செய்தி குலசேகரனைத் துக்கத்தில் ஆழ்த்தியது. பெருமாள் அமுது செய்யவில்லை என்றால் பரிசனங்கள் யாவருமே பட்டினி என்பது பொருளாகி விட்டது.

திருவரங்க நகரில் அரங்கன் வாழ்ந்த வாழ்க்கை அவனது நினைவுக்கு வந்தது. அரங்கன் ஒரு தெய்வம் மட்டுமல்ல; அரசரும் கூட!

திருவரங்க நகரையும் அதைச் சூழ்ந்துள்ள எண்ணற்ற ஊர்களையும் அவர் பரிபாலித்து வந்தார். இறையிலிகளாக (வரியில்லாத நிலங்கள்) அவருக்கு எத்தனையோ கிராமங்கள் சொந்தமாக இருந்தன. நஞ்சையும் புஞ்சையுமாக எவ்வளவோ விளைநிலங்கள் வருடா வருடம் அவரது திருவைப் பெருக்கிக் கொண்டே வந்தன.

பக்தர்களும், யாத்திரிகர்களும், அரசர்களும் காணிக் கைகளாக வேறு பொருள்களைக் குவித்து வந்தார்கள்.

எனவே இவ்விதம் செல்வங்கள் அவரிடம் பெருகிக் கொண்டே வந்ததால் அவரது வாழ்க்கை தெய்விகத்தோடு மட்டும் அல்லாமல் ராஜரீகதோடும் நடந்து வந்தது.

அவரது நித்தியப்படி காரியங்களைக் கவனிப்பதற்காக ஏராளமான பரிசனங்கள் இருந்தார்கள். பத்து கொத்து களாகப் பிரிந்து அவர்கள் கணக்கு எழுதுவதிலிருந்து கோவிலைச் சுத்தம் செய்வது வரை எல்லா ஊழியங்களையும் செய்து வந்தார்கள்.

இந்தக் காரணங்களால் திருவரங்கன் கோவிலே ஒரு குட்டி சமஸ்தானமாக இருந்து வந்தது.

இப்படிப்பட்ட சீர்களோடும் சிறப்புகளோடும் வாழ்ந்து வந்த திருவரங்க அரசர், இன்று தமது சமஸ்தானத்தைத் துறந்து, அணிமணி திரவியங்களை எல்லாம் இழந்து அன்றாட வாழ்க்கைக்கான அமுது படிக்குக் கூட வழியில்லாமல் திண்டாடுகிறாரே என்ற நினைவு குலசேகரன் மனத்தில் ஆழ மாக தைத்துக் கொண்டது.

அப்போது வாசந்திகா, நேராகக் குலசேகரன் அருகில் வந்து, ''சுவாமி! என்னிடம் நகைகள் இருக்கின்றனவே? அவற்றைக் கிராமத்தில் விற்று அமுது படிக்கான பொருட்களை வாங்கி வரலாமே!'' என்று கூறி, தனது மார்பு அணிகளையும், இதர ஆபரணங்களையும் கழற்றிக் கொடுத்தாள்.

அவற்றை வாங்கிப் பார்த்த குலசேகரன், அவற்றில் யவன நாட்டுச் செம்பொன் நாணயங்கள் பல இருப்பதைக் கண்டு திடுக்கிடவே, அவளை நோக்கி, ''இவை செம்பொன் ஆயிற்றே! உன் அம்மா இவற்றைப் பெரிதும் பாதுகாப்பாளே! இவை போனது தெரிந்தால் மிகவும் வருத்தப் படுவாளே!'' என்று கூறினான்.

உடனே வாசந்திகா, ''சுவாமி! நாங்கள் யாவரும் அரங்கனுக்கு அர்ப்பணிக்கப்பட்டவர்கள் அன்றோ! அப்படியிருக்கும் போது எங்கள் உடைமைகள் யாவும் கூட அரங்கனது சொத்துக்கள் அன்றோ! அவருக்குச் சோதனை நேர்ந்துள்ள காலத்தில் இந்த உடைமைகளைத் தியாகம் செய்வது என் கடமை அன்றோ! என் தாயார் இங்கே இருந்தால் கூட அவளும் நான் செய்ததைத் தான் செய்திருப்பாள். பாவம்! அவள் எங்கே இருக்கிறாளோ! என்ன கஷ்டப்படுகிறாளோ!'' என்று கூறினாள்.

பிறகு குலசேகரன் பலமுறை மறுத்தும், வாசந்திகா அந்த நகைகளை வற்புறுத்திக் கொடுக்கவே அவற்றைப் பெற்றுக் கொண்டு, குறளனையும் அழைத்துக் கொண்டு அருகில் ஏதாவது கிராமம் இருக்கிறதா என்று தேடிக் கொண்டு புறப்பட்டான் அவன்.

வாசந்திகா கொடுத்த யவன நாணயங்கள் அந்த நாளில் மதிப்பு மிகுந்தவை. ரோம் நாட்டிலிருந்து அவைப் பண்டமாற்று முறையில் தமிழ்ப் பிரதேசங்களில் தருவிக்கப்

பட்டன. நாணய முறையில் அவை புழங்கி விடாமல் இருக்கும் வண்ணம் அவைகளின் மேற்புறத்தில் ஒரு வெட்டு போட்டு இருப்பார்கள். இந்த நாணயங்களில் உள்ள தங்கத்திற்காக அவற்றை அந்நாளைய மக்கள் பெரிதும் விரும்பினார்கள்.

முப்பது பேர் அடங்கிய ஒரு கூட்டத்துக்கு பல நாட்களுக்கான உணவுப் பொருள்களை ஒரு நாணயத்தின் மதிப்புக்கே வாங்கி விடலாம்.

அத்தகைய ஒரு நாணயத்தை அருகிலுள்ள ஒரு கிராமத்தில் மாற்றி, அரங்கனது கூட்டத்திற்கான அனைத்துப் பொருள்களையும் குலசேகரன் வாங்கி வந்தான். நாட்கள் பல சென்றன.

பல இன்னல்களைச் சந்தித்த அரங்கன் ஊர்வலம் திருக்கோட்டியூரைத் தாண்டி காட்டு வழியாகச் சென்று கொண்டிருந்தது. பயணத்தின் களைப்புத் தாளாமல் பிள்ளை உலகாசிரியர் நோய்வாய்ப் பட்டார்.

பிள்ளை உலகாசிரியரின் நோய் அதிகமாயிற்று. அதைக் கேள்விப்பட்ட பரிவாரங்கள் எல்லோரும் அவரது துணிக் கூடாரத்தை கவலையோடு சூழ்ந்து கொண்டார்கள். பலர் அவரைப் பார்த்ததும் கண்ணீர் விடலானார்கள்.

( தொடரும் )

**கீதாசார்யன் சந்தா விவரம்**

| | |
|---|---|
| ஆயுள் சந்தா | ரூ. 100 |
| ஆண்டுச் சந்தா | ரூ. 12 |

# கண்ணன் கதைகள்

## தீபம் நா. பார்த்தசாரதி

## 12. அரக்கர்கள் அழிகிறார்கள்

இயற்கை வளங்கொழிக்கும் யமுனை நதியின் கரையில் கண்ணனும் மற்ற நண்பர்களாகிய சிறுவர்களும் ஓடியாடி விளையாடினார்கள். கோகுலத்துச் சிறுவர்கள் மந்தை மந்தையாக மாடுகளை மேய்த்தனர். கன்றுகள், மாடுகள் ஆகியவற்றைக் கூட்டமாக மேய்ப்பதற்கு அழைத்துச் செல்வதில் அந்தச் சிறுவர்களுக்கு ஒருவகைத் தனிப்பட்ட இன்பம் இருந்தது. மாடுகளின் கழுத்தில் மணிகள் அசைந்தாடி ஒலிக்கும்போதெல்லாம் அந்த மணியோசை அவர்கள் உள்ளத்தில் இன்பம் நிறைந்ததோர் உணர்வை உண்டாக்கிற்று. கண்ணன் பலராமன் ஆகிய இருவருக்குமே கோகுலத்துச் சிறுவர்களுடனும், அவர்களால் மேய்க்கப் பெறும் ஆநிரைகளுடனும், சுற்றித் திரிவதில் விருப்பம் அதிகம்.

அவ்வாறு திரியும்போது ஒரு நாள் கண்ணனுக்கு ஒரு துன்பம் ஏற்பட இருந்தது. மந்தையில் ஒரு கொழுத்த ஆண் கன்று கண்ணனுக்கு அருகிலேயே உரசிக்கொண்டும், முட்டி மோதிக் கொண்டும் வந்தது. கண்ணன் அந்தக் கன்றின் செயல்களைச் சந்தேகத்தோடு உற்றுக் கவனித்துக் கொண்டு வந்தான். கோகுலத்து ஆநிரைகளில் அத்தகைய முரட்டுக் குணம் வாய்ந்த கன்றை அதற்கு முன்பு எப்போதும், எங்கும் பார்த்ததாகவே அவனுக்கு நினைவில்லை. தன்னை மட்டுமே குறிவைத்து முட்டி மோதி விடுவதைப் போல அந்தக் கன்று வருவதை நன்றாகக்

கவனித்தபின் கண்ணனுடைய மனத்தில் ஏற்பட்டிருந்த சந்தேகம் வலுப்பட்டது.

உண்மையில் அது ஒரு கன்று அல்ல என்று அவனுக்குத் தோன்றியது. ஏதோ ஓர் அசுரனின் மாயசக்தி அப்படி உருவு கொண்டு தன்னைத் தாக்குவதற்காகவே பின் தொடருகிற தென்று கண்ணன் அனுமானித்துக் கொண்டான். அதனை யார் ஏவியிருக்கக் கூடும்?' என்பது பற்றியும் அவன் மனத்திற்கு ஒருவாறு புரிந்திருந்தது. உண்மையை வெளிப்படுத்துவதற்கு நேரம் வரட்டுமென்று காத்துக் கொண்டிருந்தான் கண்ணன். மரங்களடர்ந்து செழித் திருந்த பசுமை வெளிகளினிடையே ஆநிரைகள் மெல்லச் சென்று கொண்டிருந்தன. முன் போலவே அந்தக் கொழுத்த கன்று கண்ணனை விட்டு விலகாமல் உரசியபடி வந்துகொண்டிருந்தது.

வழியின் குறுக்கே ஒரு பெரிய விளாமரத்தின் கீழ் வந்ததும் குபீரென்று அந்தக் கன்று சீறிக்கொண்டு அவன் மேல் பாய்ந்தது. அது இப்படிச் செய்யும் என்பதை எதிர் பார்த்தே அதனருகில் நடந்து கொண்டிருந்த கண்ணன், பின் புறமாகக் குனிந்து அதன் இரண்டு கால்களையும் வாரித் தூக்கினான், தூக்கிய வேகத்தில் தலைக்கு மேல் உயரத்தில் சுழற்றி விளாமரத்துக் கிளைகள் நொறுங்கிக் கனிகளும், காய்களும் சிந்துமாறு ஓங்கி அடித்தான். கன்று எலும்புகள் உடைந்து குருதி ஒழுகக் கீழே விழுந்து இறந்த போது கன்றாகத் தெரியவில்லை! வத்சரகரன் என்னும் அரக்கனின் உருவாக மாறியது. இறந்துகிடந்த அந்த அரக்கனின் தோற்றத்தைப் பார்த்ததும் அவனைக் கம்சன் தான் தன் மேல் ஏவியிருக்க வேண்டுமென்று எண்ணிக் கொண்டான் கண்ணன்,

இன்னொருநாள் யமுனைக் கரையில் ஆநிரைகள் நீர் பருகிக்கொண்டிருந்த போது ஒரு சம்பவம் நடந்தது. பகக்

களையும், கன்றுகளையும், நீர்பருக விட்டுவிட்டு மரங்களின் நிழல் செறிந்த மணற் பரப்பில் தாங்கள் பகல்வேளை உணவுக்காகக் கொண்டு வந்திருந்த கட்டுச் சோற்று மூட்டைகளை அவிழ்த்துச் சாப்பிட உட்கார்ந்தனர், கோகுலத்துச் சிறுவர்கள். பலராமனும் அந்தச் சிறுவர் கூட்டத்தினிடையே இருந்தான். கண்ணன் மட்டும் சிறிது தொலைவு தள்ளி ஒரு மணல் திடலில் யாரையோ எதிர் பார்த்துக் காத்திருப்பது போல் நின்று கொண்டிருந்தான். அப்போது வெண்ணிற மலை ஒன்றே நகர்ந்து வருவது போல் உயரமும் பருமனுமாக இராட்சதக் கொக்கு ஒன்று யமுனைக் கரையிலிருந்து கண்ணனை நோக்கிப் புறப்பட்டு வந்தது. அதனுடைய நீண்ட பெரிய மூக்கே ஒரு மலைப் பாறை போல் இருந்தது. அது தனது பிரம்மாண்டமான சிறகுகளை அசைக்கும் போதெல்லாம் சூறாவளி கிளம்புவது போல் புழுதியும் மணலும் கிளம்பின. மாடுகளெல்லாம் இந்தக் கொக்கின் பயங்கர உருவத்தைக் கண்டு வெறித்து ஓடின. மரத்தடியில் சோற்று மூட்டைகளை அவிழ்த்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்த சிறுவர்கள் அரண்டு விலகிப் போய் நின்று கொண்டார்கள்.

கண்ணன் மட்டும் அஞ்சாமல் சிரித்துக்கொண்டே நின்றான். அவனுக்கு மிக அருகில் வந்து மலைக்குகை போன்று தன் அலகுகளை விரித்துப் பிளந்து விழுங்கி விடுவது போல் நெருங்கியது அந்தக் கொக்கு' அப்போதும் கண்ணன் பேசாமல் இருந்தான். கொக்கு. அவனை விழுங்கியது. சிறுவர்கள் ''ஐயோ கண்ணனை விழுங்கு கின்றதே'' என்று அலறிக் கூச்சலிட்டார்கள். கண்ணன் கொக்கின் தொண்டைவரை ஒரு துன்பமும் இன்றிச் சென்றான். தொண்டைக்கும் கீழே அது கண்ணை விழுங்கத் தொடங்கியதும் தன் ஆற்றலை அது சிறிது உணருமாறு செய்தான்.

அடுத்தகணமே கொக்கின் நெஞ்சுக்குழி முழுதும் வெந்து சாம்பலாகி விடுவதுபோல் நெருப்பாகக் கனன்று தகித்தது. அது பயந்து நடுங்கிப் போய் விழுங்கிய வேகத்தில் ஒரு துன்பமும் இல்லாமல் கண்ணனை உமிழ்ந்து விட்டது. உமிழ்ந்ததும் அவன் தன்னை என்ன செய்து விடுவானோ என்று பயந்து மெல்ல ஓட்டமெடுக்க நினைத்தது. கண்ணன் அதன் நோக்கத்தை அறிந்து கொண்டு அதை விடவில்லை. பிடித்துக் கொண்டான். பிடித்துக் கொண்டு அதன் மூக்கை இரு கூறுகப் பிளந்தெறிந்து கொன்றான். கொன்ற பின்புதான் உண்மையில் அது கொக்கு அல்ல, பகாசுரன் என்னும் அசுரனே கம்சனுல் ஏவப்பட்டு அப்படிக் கொக்கு உருவாகக் கண்ணனைக் கொல்ல வந்திருக்கிறான் என்று தெரிந்தது. கண்ணன் கொக்கைக் கொன்றதும் கோகுலத்துச் சிறுவர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்து கொண்டே ஓடி வந்தனர். கண்ணனின் திறமையைப் பாராட்டினர். நந்தகோபரும், யசோதையும், பிருந்தா வனத்துக்கு வந்த காரணமே கண்ணனுக்கு ஏற்படும் தீமைகள் குறைய வேண்டும் என்பதற்காகத்தான். ஆனுல் அங்கு வந்தும் தீமைகள் குறையவில்லை. எப்படியாவது கண்ணனை அழித்தொழித்து விடவேண்டும் என்று கம்சன் தீய சக்திகளைத் தொடர்ந்து ஏவிக்கொண்டே இருந்தான். ஒன்ரு? இரண்டா? பல விதங்களில் பல உருவங்களில் கண்ணனுக்குத் தீமைகள் வந்து கொண்டிருந்தன.

(தொடரும்)

# வைகுந்த விண்ணகரம்

**ஆரே அறிவார்?:** ஸ்ரீவைகுண்டம், பரமபதம் என்ற சொற்கள் அடிக்கடி நம் காதுகளில் விழுகின்றன! ஸ்ரீவைஷ்ணவர்களோடு வாழ்பவர் இச்சொற்களை (இப்பெயர்களை)ப் பல முறை கேட்க முடியும். ஸ்ரீவைகுண்டம் திவ்ய நகரம்! ஒளி பொருந்திய நகரம்; காண்பதற்கும் அரிய நகரம்! அது எல்லோருக்கும் அவ்வளவு எளிதில் கிடைத்து விடாது. எம்பெருமானே நினைத்தால் தான் ஒவ்வொருவனும் அங்கு செல்லமுடியும்! ஸ்ரீவைகுண்டத்தில் எம்பெருமானை ஸேவிக்க வேண்டும். அவனுக்குப் பல்லாண்டு பாடவும், அவனை அடைந்து தொண்டு செய்யவும் பெரும்பேறு பெற்றிருக்க வேண்டும் அதனால் ஏற்படும் இன்பம் மிகவும் வேறுபட்டது! இப்படிப்பட்டது என்று எண்ணிச் சொல்லவும் முடியாது.

# ஸ்தலசயனத்துறைவார்

ஸ்ரீவைகுண்டத்திற்கு அழைத்துச் செல்லுமாறு பல மகான்கள் பகவானை வேண்டினார்கள்! அரும்பாடு பட்டார்கள்; கிடைக்கவில்லை! இராமன், தனக்குப் பேருதவி செய்த ஹநுமானை ஸ்ரீவைகுண்டத்திற்கு வருமாறு அழைத்தான்: அங்கு இராமன் இல்லை; அதனால் அங்கு வர விருப்பமில்லை என்று ஹநுமான் கூறிவிட்டார். ஸ்ரீவைகுண்டத்திற்குப் பலர் சென்றிருக்கிறார்கள். ஆனால், அங்கிருந்து திரும்பி வந்தவர் எவரும் இலர். ஸ்ரீவைகுண்டத்தில் பகவான் எப்படி எழுந்தருளி இருக்கிறான்? அந்நகரம் எப்படி இருக்கிறது? அவ்விடத்தில் பகவானுக்கும் அடியார்களுக்குமுள்ள பரிமாற்றம் எத்தகையது? என்று என்று எவரேனும் கூறிய

துண்டா? அல்லது நம் சிற்றறிவைக் கொண்டுதான் ஆராய முடியுமா? முது நூல்களே நமக்குச் சான்று!

திருநாங்கூரிலுள்ள வைகுந்த விண்ணகரத்திற்கு எளிதில் செல்லலாம். ஸ்ரீவைகுண்டத்தில் இருப்பது போலவே இங்கு எம்பெருமான் அமர்ந்திருக்கிறான். வைகுந்த நாதன் திருவனந்தாழ்வானுகிற சீரிய சிங்காசனத்தில் அமர்ந்துள்ளான் வலத் திருவடியை மடித்துக் கொண்டு, முழந்தாளில் வலத்திருக்கையை வைத்துக் வைத்துக் கொண்டும், இடத்திருக்கையை திருவனந்தாழ்வான் மீது ஊன்றிக் கொண்டும், திருவாழி திருச்சங்கைத் தாங்கிக் கொண்டு எழுந்தருளி இருக்கிறான். உதங்கர் என்பவர் மகரிஷி. அவர் எம்பெருமானைக் குறித்துத் தவம் செய்தார். பரமபத நாதனை ஸேவிக்க ஆசைப்பட்டார். அங்கிருப்பது போலவே வைகுந்த விண்ணகரத்தில் எம்பெருமான் ஸேவை ஸாதித்தான். 'உபரிச்ரவஸ்' என்பவன் அரசன்; விஷ்ணு பக்தன். இவன் திருநாங்கூர் திவ்ய தேசங்களைப் புதுப்பித்து எம்பெருமான்களுக்கும் பெருவிழா நடத்தி வைத்தான். அவனுக்கு எம்பெருமான் வைகுந்த நாதனாக ப்ரத்யக்ஷம். எம்பெருமான் வைகுந்த நாதன்; தாயார் வைகுந்தவல்லி. அமைதியான இடம்! அருகில் சென்று ஸேவிக்கலாம்; மகிழலாம்! தான் பெற்ற இன்பத்தைப் பிறரிடம் சொல்லி அவர்களையும் மகிழ்விக்கலாம். ஏரார் முயல்விட்டுக் காக்கைப் பின் போவதே! நாம் இராமநுசனடியார்கள்; நமக்கு மோட்சம் உறுதி! மரணமானால் வைகுந்தம் கொடுப்பான் எம்பெருமான்! அதற்காகக் தீவிரமாய் உழைப்பதை விட்டு வைகுந்த விண்ணகரம் என்ற இந்தத் திவ்யதேசத்திற்குச் செல்லுங்கள். அவனே தான் இவன்! ஆரே அறிவார் இவர் பெருமை!

**அச்சமில்லை; அச்சமில்லை: அச்சமில்லையே!:** நா படைத்த பயனாக நாராயணா என்று சொல்ல வேண்டும்! சொல்ல

முடியாவிட்டால், பிறர் சொல்லும் போதேனும் கேட்டு மகிழ வேண்டும். தானும் சொல்ல மாட்டான்; பிறர் சொல்வதைக் கேட்டும் பொறுக்கமாட்டான் இரணியன். எம்பெருமான் நரசிம்மனாகத் தோன்றினான்! கெட்ட எண்ணங் கொண்ட இரணியனின் மார்பைப் பிளந்தான்; இரணியனை அழித்தான்! பகவான் அவ்வளவு கடினமான உள்ளம் கொண்டவனா? என்று நினைக்க வேண்டா! பிறர்க்கு உதவுவதற்காகவே தன்னை அர்ப்பணித்துக் கொண்டவன் அவன்! அதனால் தனக்கு வரும் துன்பத்தையும் அவன் பொருட்படுத்துவதில்லை! தேவர்களைக் காப்பதற்காகக் கடல் கடைந்து அமுதம் எடுத்து அளித்தான்! அவன் என்றென்றும் (எந்நாளும்) இருப்பவன். முதுமை, இறப்பு எல்லாம் அவனுக்கு இல்லை! எத்தனை முறை அவதரித்தாலும் அயர்வு அடைவதில்லை! யௌவனம் (வாலிபம்) அவனை விட்டு நீங்குவதில்லை; அழகும் குறைவதில்லை. அவனே வைகுந்த விண்ணகரத்தில் இருக்கிறான். அவனை அடைந்தவர்க்கு அச்சம் ஏது?

மீன்கள் தண்ணீரில் தான் வாழும்! தண்ணீரை விட்டுப் பிரிந்தால் உயிர் நீங்கும்! வைகுந்த விண்ணகரத்தின் அருகில் இருக்கும் சோலைகளில் பல வகையான நறுமலர்கள் கீழே உதிர்ந்து கரடு முரடான அந்த நிலத்தையும் மெத்தென்ற பஞ்ச சயனமாக மாற்றியுள்ளன. நீரிலேயே வாழும் கயல் மீன்களுக்குத் தண்ணீரும் உறுத்துகிறதாம்! அதனால் தண்ணீரை விட்டுப் பிரிந்து மலர் நிறைந்த நிலத்தில் துள்ளிப் பாய்ந்து விளையாடுகிறதாம்! தன் உயிர் நீங்கி விடுமே, என்று அஞ்சுவது இல்லை! வைகுந்த நாதனின் துயரறு சுடரடி நிழலில் வாழும் உயிர்களுக்கு அச்சம் உண்டோ? 'அதலோபயம் கதோபவதி' என்று மறையும்

கூறுகிறதே! அச்சமில்லை; அச்சமில்லை; அச்சமில்லையே!

**சலங்கொண்ட விரணியனதகல் மார்வம் கீண்டு**
**தடங்கடலைக் கடைந்தமுதம் கொண்டுகந்த காளை,**
**நலங்கொண்ட கருமுகில் போல் திருமேனியம்மான்**
**நாடோறும் மகிழ்ந்தினிது மருவியுறை கோயில்,**
**சலங் கொண்டு மலர் சொரியும் மல்லிகை யொண் செருந்தி**
**சண்பகங்கள் மணநாறும் வண்பொழிலினூடே**
**வலங்கொண்டு கயலோடி விளையாடு நாங்கூர்**
**வைகுந்த விண்ணகரம் வணங்கு மட நெஞ்சே!**

**(பெரிய திருமொழி 3-9-1)**

என்ற இப்பாசுரம் கொண்டு எம்பெருமானை வணங்கினால் அச்சம் நீங்கி ஆனந்தம் அடையலாம்.

**வணங்கேன் பிறதெய்வம்:** பகவான் (ஸ்ரீமந் நாராயணன்) அழிவில்லாதவன்! அவன் தரும் மோட்சமும் அழிவில்லாத செல்வம்! அவனே பரம்பொருள்! தேவாதி தேவனும் அவனே! மற்ற தெய்வங்களும் அவனையே அடைந்து வாழ்கின்றனர்; பயமில்லாமல் இருக்கின்றனர்! ஊழிக் காலத்தில் அந்தந்த தேவதைகளையும் ஸ்ரீமந் நாராயணன் ஒருவனே காப்பாற்றுகிறான்.

அவன் ஒருவனே அழியாமல் இருந்தான் என்பதை 'ஏகோஹவை நாராயண ஆஸீத் நப்ரஹ்மா, நேசாந:' என்கிறது வேதம்! அவனே மற்ற தெய்வங்களுக்கு அதிகாரங்களைக் கொடுத்தான்! நாட்டினான் தெய்வமெங்கும் நல்லதோரருள் தன்னாலே! அவனது கட்டளையின்படியே அவை செயல்படுகின்றன!; உலகமும் இயங்குகிறது! உலகைக் காப்பதற்காகவே இருப்பவன் அவன்! ஆம்! பொறுப்பு அவனுடையது என்று உலகமே கூறுகிறது! அழிவில்லாத அவனை வணங்கினால் அழியாப் பேரின்பம் பெறலாம்; அவனையே நினைக்க வேண்டும்; அவனைப்பற்றியே கூறவேண்டும்!

அவனது பெருமைகளைக்கூறும் நூல்களையே கற்க வேண்டும்! அவன் ஸத்துவ குணம் பெறுவான்! அவனடியார்களோடு கூடி வாழ்பவனின் ஸத்துவ குணம் வளரும்! என் அடியார் அது செய்யார், செய்தாரேல் நன்று செய்தார் என்று பகவானும் உகக்கும்படி நல்ல செயல்களையே அவன் (ஸாத்விகன்) செய்வான். நன்னிலை அடைவான்!

அழியும் தெய்வங்களை அழியாதவை என்று நினைத்து அவற்றின் காலைக் கட்டிக்கொள்ளாதீர்! அவற்றைப் பற்றிக் கூறும் பொய்நூலை மெய்நூலென்று நினைத்து மருளாதீர்! அறிவை முறையற்ற வழியில் செலுத்திக்கலங்காதீர்! நரகில் வீழ்ந்து துன்புறுதீர்! திருமாலையன்றி 'வணங்கேன் பிற தெய்வம்' என்றிருப்பவனே தெள்ளறிவு கொண்டவன்! உண்மையான ஸ்ரீவைஷ்ணவன்! ஸ்ரீவைகுண்டத்திற்குச் சென்றாலும் பகவானுக்குப் பல்லாண்டுதானே பாடமுடியும்! அதை வைகுந்த விண்ணகர திவ்யதேசத்தில் செய்யலாமே! வைகுந்த நாதனைச் சூழ்ந்திருந்து ஏத்துங்கள்! நல்வாழ்வு பெறலாம் என்கிறார் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்!

**வணங்கேன் பிறதெய்வம் மாலடியாரல்லாக்**
**குணங்கேடர் தங்களுடன் கூடே—லிணங்கி நின்று**
**வைகுந்த விண்ணகரம் வாழ்த்துவேன் ஈதன்றே**
**வைகுந்த விண்ணகர வாழ்வு!**

(நூற்-திருப். அந்தாதி-31)

---

திரு நா. வேணுகோபால நாயக்கர் எழுதிய 'எம்பெருமானும் எம்பெருமானாரும்'' என்ற கட்டுரையில் திரு. காளியப்ப முதலியார் எழுப்பியுள்ள சந்தேகங்களுக்கு நா. வேணுகோபால நாயக்கர் பதில் கட்டுரை எழுதியனுப்பியிருக்கிறார். தவிர்க்க முடியாத சில காரணங்களால் இவ்விதழில் வெளியிட முடியவில்லை. அடுத்த இதழில் வெளியிடப்படும். (ஆ-ர்)